திராவிடநாடு

18—8—57 | வார வெளியீடு | விலை 0—2—6

தமிழகத்தில்!

[கவிஞர் சாமி பழனியப்பன்]

உழைப்பார்க்கே இவ்வுலகில் உணவுண் டென்ற
உயராணை பிறப்பிக்கும் கடவு ளன்றி
உழைப்பாளர் உருக்குலைய வேண்டு மென்னும்
ஊதாரி ஆணைசெய்யும் கடவுள் வேண்டாம்;
தழைக்கின்ற நல்லன்பு மட்டும் கேட்கும்
தகைமைசால் கடவுளே வேண்டு மல்லால்
பிழைக்குரிய குருக்களோடு குடும்பம் கூத்தி
பெருங்கோயில் விழாக்கேட்கும் கடவுள் வேண்டாம்.

'எல்லார்க்கும் பொதுவாமிவ் வுலகத் தின்பம்;
எத்தாமல் பிறர்பங்கைத் திருடா வண்ணம்
நல்வாழ்வே எல்லோரும் வாழ்க' வென்று
நன்குணர்த்தி வாழ்விக்கும் கடவு ளன்றி,
வல்லவர்கள் சிலபேர்கள் எளியர் தம்மை
வதைபுரிந்து சுகவாழ்வு வாழ்த லென்னும்
பொல்லாத நிலைகண்டும் நெஞ்சை — வாயைப்
பொத்திக்கொண் டிருக்கின்ற கடவுள் வேண்டாம்.

சரிநிகரே இப்புவியில் வாழ்வோ ரெல்லாம்!
சாதியினால் சமயத்தால் மதத்தினாலே
ஒருசிறிதும் அவருள்ளே உயர்வு தாழ்விங்
குத்வாதென் றுணர்த்துகிற கடவு ளன்றி
ஒருசாரார் மேற்குலத்தர் பிறப்பால் என்னும்
உதவாத செயலொப்பிக் கல்லாய்ச் செம்பாய்
இருந்தேதன் பூசனைகள் கேட்கும் பொல்லா
இழிகடவுள் தமிழகத்தில் இனியும் வேண்டாம்.



சாவடி

"ஒற்றன்"

"புத்திமான் பலவானுவான், என்று ஒரு பழமொழி உண்டல்லவா பெரியய்யா !"

"ஆமாம், அதற்கென்ன ?"

"யூகமும் புத்திசாலித்தனமும் இருந்தால், எவ்வளவு பெரிய நாட்டையும் ஏமாறச் செய்துவிடலாம் என்று நிரூபித்துவிட்டது இலங்கை."

"இலங்கையா ?"

"ஆமாம் !"

"இன்னமும், தமிழர்களை வெளியேற்றும் கொள்கை குறித்து ஒரு முடிவுக்கு வராது டில்லியை ஏமாற்றிக்கொண்டிருக்கிறதே, அதைக் குறிப்பிடுகிருயா மணிமுடி ?"

"அது அல்ல பெரியய்யா ! தினசரி, கீதம் தருகிறது, அல்லவா இலங்கை வானெலி..."

"ஆமாம் ! நம் பஞ்சாயத்துப் போர்டில்கூட மாலை 5 மணியாகிவிட்டால் 'இலங்கையை, வை' என்றுதான் கேட்கிருர்களாம்."

"ஏன், பெரியய்யா அப்படி கேட்கிருர்கள் ?"

"ஏனு ! சினிமாப் பாட்டுக்களை வைக்கிறது இலங்கை வானெலி — கேட்க, இனிமையாயிருக்கிறது— அதனுல் வைக்கச் சொல்லுகிருர்கள்."

"இனிமையாயிருப்பதால் வைக்கச் சொல்லுகிருர்கள். எல்லோரும் இலங்கையைத் திருப்பி, கீதம் கேட்கிருர்கள். இதுபோல நம்ம வானெலி நிலையமும். மக்களுக்குப் பிடித்தமான பாடல்களை, வைக்கலாமல்லவா ?"

"ஆமாம், வைக்கலாம் ! மக்களுக்காகத்தானே வானெலி இருக்கிறது. ஏன், மணிமுடி, நம்ப ரேடியோ நிலையத்தார் அப்படிச் செய்யவில்லை...?"

"சினிமாப் பாட்டுகள் என்ருல் கீழ்த்தரமான சங்கீதம் ! ஆகவே, அதற்கு இடம் தர முடியாது. உயர்ந்த சங்கீதத்தை வளர்ப்பதே எங்கள் இலட்சியம்—என்று திடீரென டில்லி மந்திரி கேஸ்கர், தடை போட்டார். பலர் கண்டித்தார்கள் இதை. இன்னும் பலர் நல்லவிதமாக எடுத்துச் சொன்ஞர்கள். கேட்கவில்லை, கேஸ்கர் !! இலங்கை வானெலி, இச்சமயமாகப் பார்த்து, சினிமாப் பாடல்களை வைத்தது. அதோடு, இதன் மூலம் லாபம் சம்பாதிக்கவும் கற்றுக் கொண்டது."

"இலாபம் சம்பாதிப்பதா ?"

"ஆமாம் பெரியய்யா ! ஒவ்வொரு பாட்டு முடிந்ததும், வியாபார விளம்பரம் செய்கிருர்களே — அதற்காக இலங்கை வானெலியினர் பணம் வாங்கிக் கொள்ளுகிருர்கள். பணமும் வரவு. பேரும் நல்ல பேரு. இது, புத்திசாலித்தனம்தானே."

"ஆமாம் ! கெட்டிக்காரத்தனம் தான்...ஏன், மணிமுடி ? இன்றைக்கு என்ன உன் கவனம் இந்த வானெலி பற்றித் திரும்பியிருக்கிறது..."

"வானெலி, வளர்ந்து வரும் விஞ்ஞான உலகில் சிறந்ததோர் சாதனம் பெரியய்யா ! அதைக் கொண்டு அறிவை வளர்க்கலாம் — புதுமைகளைச் சொல்லித் தரலாம்—ஓய்வு நேரக் கல்லூரியாகப் பயன்படுத்தலாம்—உற்சாகமூட்டும் தகவல்களை நாட்டு மக்களுக்குத் தரலாம்..."

"இதையெல்லாம் நமது வானெலி நிலையத்தார் செய்யவில்லை என்கிருயா ?"

"செய்கிருர்கள். ஆனுல் எதையும் சுவையுடனும், திறமையுடனும் எடுத்துச் சொன்னுல்தானே ருசிக்கும். பிடிக்கும்."

"சுவையுடன் நிகழ்ச்சி நடத்தும் திறமையுள்ளவர்கள் வானெலியில் இல்லை என்கிருயா, மணிமுடி !!"

"இருக்கிருர்கள் பெரியய்யா ! வேண்டியவர்கள் இருக்கிருர்கள்... ஆனுல், அவர்களை ஆட்டிப் படைக்கும் மந்திரிகளாயிருக்கிருர்களே, அவர்கள் இஷ்டப்படி ஆடவேண்டியிருக்கிறது. இதைச் சொன்னுல் எதிர்க் கட்சி பிரசாரம் ஆகிவிடுமோ —அவருடைய கதையைப் பரப்பினுல்

மாற்றுக் கட்சி வளர்ந்துவிடுமோ—
என்கிற அச்சம் காங்கிரஸ் மந்திரிக்கு
இருக்கிறது. அதனுல் அவர், கடிவா
ளம் பூட்டுகிருர். கட்டுப்பாடு செய்
யப்பட்ட கானமும், தடைக்கு
ஆளான எழுத்தும், இயந்திரம்
போலத்தானே !!"

"ஆமாமாம் ! தேர்தல் சமயத்தில்
கூட ஒரே காங்கிரஸ் பிரச்சாரமாகத்
தான் இருந்தது..."

"திரைப்பட உலகில் நமது எண்
ணங்கள் புகுந்து, அவைகள் பாடல்க
ளாகவும் வசனங்களாகவும் உருப்
பெற்று உலவுவதைக் கண்டதும்
இதையெல்லாம் வைக்கலாமா?
என்று ஒரேயடியாகச் சினிமாப்
பாட்டுகளுக்கேத் தடைபோட்டார்
கேஸ்கர்......இப்போது இங்கே
வானெலியிருந்தும் எல்லோரும்
இலங்கையைத்தான் கேட்கிருர்கள்.
இதுபற்றி பார்லிமெண்டில் சமீபத்
தில் விவாதம்கூட நடந்திருக்கிறது
பெரியய்யா ! அதனுல்தான் உங்க
ளிடம் சொல்லும் கவனம் வந்தது."

"பார்லிமெண்டில் என்ன பேசி
ஞர்கள் ?"

"இலங்கைக்கிருக்கும் புத்திசாலித்
தனம் உங்களுக்கில்லையே ! நல்ல
வியாபாரம் ஆக்கிவிட்டதே, இலங்கை
எல்லோரையும் வசப்படுத்தி விட்
டதே...என்று பல உறுப்பினர்கள்
டில்லியைக் கண்டித்தார்கள்."

"அதற்கு என்ன பதில் சொன்
ஞர்கள், சர்க்கார் ?"

"குப்புற விழுந்தும் மீசையில்
மண் ஒட்டவில்லை, என்ருனுமே ஒரு
வன் ! அதுபோல கேஸ்கர், "இலங்கை
செய்தால் என்ன ? அப்படி நாமும்
செய்யவா வேண்டும் ! இலங்கை
செய்வது; மட்டமான காரியம்
செச்சே ! மிக மிக மட்டரகமானது"
என்று கேவலமாகப் பேசி, தான்
ஏதோ கோபுரத்திலிருப்பவர்போலக்
காட்டிக்கொண்டுவிட்டார்."

"தவறை எடுத்துச் சொன்ன
போதும், திருத்திக்கொள்ளும் சுபா
வம் இன்னும் வரவில்லையா ?"

"அந்த நல்ல குணம் ஏற்பட்டுவிட்
டால் எவ்வளவோ துறைகளில் நா
முன்னேறியிருக்குமே, பெரியய்யா
அந்தப் பெருங்குணம் எப்படிவரும்!"

"ஆமாம் ! இலங்கை இப்படிச்
செய்யக்கூடாது என்று டில்லி தடை
விதிக்கக் கூடாதோ ?"

"முடியாது ! சர்வதேச சட்டப்படி
இலங்கை செய்வது, அத்து மீறிய
செயலல்ல."

"சிறுநாடு, இவ்வளவு பெரிய
நாட்டையே மூக்குடையச் செய்
வருகிறதே ! அசகாய சூரர்களாயிரு
கிருர்களே மணிமுடி, இலங்கை
வானெலியினர் !!"

★

'விளக்கு' உண்டு-ஒளி இல்லை!!

"வீடுகள் யாவும் விழாக்கூடங்களாகும்! மனிதர்கள் உள்ளமெல்லாம் மகிழ்ச்சி பொங்கும்! இந்த நாள், ஆண்டுக்கோர், திருநாளாகும். ஊர்கள் தோறும் கேளிக்கையும், கேட்டிராத அளவுக்கு ஆனந்த வெள்ளமும் நிறையும். விளையாட்டுப் பந்தயங்கள், விளக்கொளி வரிசைகள், காட்சி அளிக்கும். புத்தாடை பூண்டு, ஆடவரும் பெண்டிரும், சிறுரும் மாணவரும், திகழ்வர். நிச்சயமாக நான் சொல்கிறேன். இந்த நாள், வரப்போகும் யுகங்கள் தோறும், ஒரு பெரிய விழா நாளாக விளங்கும்", என்று மனைவிக்குக் கடிதம் எழுதினான் மகிழ்ச்சியோடு! அவ்வளவு நம்பிக்கையும், அந்த நாள் எவ்வளவு சிறப்பு வாய்ந்தது என்பதையும் அவன் உணர்ந்திருந்தான்!! ஏனெனில், விடுதலைக் கொடியேந்தி, சுதந்திரச் சுடரை ஏற்றுவிக்க, பட்டபாடுகளும் அதற்காக உயிரைத் துச்சமென மதித்து ஒன்றுதிரண்டமக்கள் மாமன்றமும், அவன் கண்ணெதிரே காட்சி அளித்தன. அவனது நாட்டை அடிமைப் படுத்தியவர்கள், மாற்றார் அல்ல! சொந்தக்காரர்கள் என்றுகூடச் சொல்லலாம். வேற்று மதத்தவர் அல்ல, இருவரும் இயேசுநாதரின் வழியினர்தான்; வேற்று மொழி பேசுவோரும் அல்ல; ஆங்கிலக் குடும்பத்தினர்தான். எனினும், தனக்கொரு நாடு—அது எங்கோயிருப்பவர்களின் எடுபிடியாக யிருக்கிறது—என்கிற எண்ணம், இதயத்தில் ஒலித்து, சுதந்திரக் கொடியைத் தூக்கிப் பிடிக்கச் செய்தது. போராட்டங்கள் பல! ஆதிக்கம் செலுத்திய இங்கிலாந்து எளிதில் இணங்கவில்லை — இறுதியில்? சொல்லவுமா, வேண்டும்!! சுதந்திரம், கிடைத்தது. அமெரிக்கா, தனியரசாயிற்று. அக்களிப்பில், ஜான் ஆடம்ஸ், மனைவிக்குத் தீட்டிய கடிதமே, மேலே தந்தது. அமெரிக்க சுதந்திரப் பட்டயத்தைத் தயாரித்தவர்களிலே ஒருவன் ஆடம்ஸ்! பிறகு, அமைந்த குடியரசுத் தலைவனாகவும் கோலோச்சினான்! அவன், முதல் அமெரிக்க சுதந்திர நாளன்று, 'நான் நம்புகிறேன். யுகங்கள் பலவானாலும், இந்நாள், அமெரிக்க இல்லங்களின் விழாநாளாக விளங்கும்', என்கிற நம்பிக்கையோடு எழுதினான். அந்நம்பிக்கை, வீணாகி விடவில்லை — ஒவ்வோராண்டு ஜூலை 4-ந் தேதியும், அமெரிக்க மக்கள், அந்தச் சுதந்திர நாளை, மிக மிக ஆடம்பரத்துடனும் உள்ளக் களிப்போடும் கொண்டாடுகிறார்கள். வேறு விழா நாட்களைவிட, சுதந்திர நாள், ஒரு சோபிதத்துடன் கொண்டாடப் படுகிறது, அமெரிக்க இல்லங்களில்.

சுதந்திரம் - ஒரு சுந்தரமான சொல். அதைப் பெற, மனிதன் ஆதிநாட்களிலேயிருந்து தாண்டி வந்திருக்கும் சங்கடங்கள் பல. ஏமாந்த காலத்தில் ஏற்றங் கொண்டோன் புலிவேஷம் போடவும், ஏமாந்தோர் எலியாக முயலாக நலியவுமான நாட்கள் மறைந்து, 'நானும் மனிதனே. நான் ஏன் உனக்கு அடிமையாயிருக்க வேண்டும்', என்கிற உணர்ச்சி வெள்ளம் பெருகவும், அதன் காரணமாக ஆதிக்கக்காரனுடன் நடாத்திடும் போரில், சிந்திய குருதியும், அறுந்த தலைகளும் ஏராளம். சிரம் போகுமா? கவலையில்லை! ஆயுள் தண்டனையா? பெரிதல்ல! தீவில் கொண்டுபோய் வைப்பீர்களா? தூ! இதனாலா எமது சுதந்திரச் சுடரை அணைத்துவிட முடியும்!—என்று கேட்டு, சுதந்திரத்துக்காக, தம்மை அர்ப்பணித்துக்கொண்ட வீரர்கள், ஆயிரமாயிரம். சிறந்து விளங்கும் அமெரிக்காவானாலும், சிந்து பாடும் ரஷ்யாவானாலும், சிறுநாடு சைப்ரசானாலும் எங்கும் சுதந்திரத்துக்காகப் போராட்டங்களும் தியாக நிகழ்ச்சிகளும் நடக்காமலில்லை. இந்த வகையிலே, இந்தியத் துணைக் கண்டத்திலே, ஆங்கிலேய ஆதிக்கத்தை எதிர்த்து நடைபெற்ற சுதந்திரப் போரினை, மனித சரிதத்தின் முக்கிய கட்டம் என்றே நாம் கருதுகிறோம். காங்கிரசுக்கு மாற்றுக் கட்சியினர் என்பதால், மறுக்கும் மாசுள்ளம் உடையோரல்ல, நாம். சுதந்திரக் கொடிதூக்கிய ஜான்சிராணியும், கட்டப்பொம்முவும், வேலுத்தம்பியும், எளிதில் மறக்கக்கூடியவர்களல்ல. இளமைதாலாட்டும் வயதில் தூக்குமேடைஏறிய பகவத்சிங், குருதேவ், ராஜகுரு போன்ற வீரர்களின் உள்ள உறுதியை எள்ளி நகையாடுவோர், இருக்க இயலாது. நாட்டுக்காக, பீரங்கியும் குண்டும் முழங்கும் கூடாரம் நோக்கிச் சென்ற வங்க வீரர் சுபாஷ் சந்திரபோசின் தீரத் தியாகம், எளிதில் மறப்பதற்குரியதன்று. இவ்வளவு பெரிய உபகண்டத்தில் கட்டுப்பாட்டினையும், அன்புநெறியையும் உண்டாக்கிய காந்தியடிகளின் தொண்டும், சாதாரணமானதல்ல. அவர் வழிநின்று போரிட்ட வ. உ. சி., திருப்பூர் குமரன், தில்லையாடி வள்ளியம்மை போன்றவர்களையும், சுதந்திரம் விரும்பிகள் போற்றவே செய்வர். இன்று எழிலும் மெருகும் பெற்று விளங்கும் நேரு பண்டிதர் அவர்களும், அவர் வழி நிற்கும் பற்பல தலைவர்களும், அற்றை நாள் செய்த தியாகத்தின் அளவை யாரும் மறைக்க முடியாது. தலைவர்கள் மட்டுமல்ல, அவர்தம் சொற்களே கட்டளையெனக் கருதிப் பாடுபட்ட தொண்டர்தம் மணிகளையும் நாம், அலட்சியமாகக் கருதவில்லை. செய்த தியாகங்கள் பல! சிறை சென்ற உத்தமர்கள் அநேகம்! குண்டடி

பட்டோர் ஏராளம்! அவர்தம் தியாகத் தீ, சுதந்திரம் அரும்பக் காரணமாக அமைந்தது. ஆகவே, சுதந்திர நாளாம் ஆகஸ்டு 15-ஐ, விழா நாளாகக் காங்கிரசினர் கொண்டாடுவது பொருத்தமானதே.

ஆடம்ஸ் அதிநம்பிக்கையோடு எழுதினான்' "யுகங்கள் தோறும் இந்நாள் விழாநாளாக அமெரிக்கர்தம் இல்லந்தோறும், உள்ளமெல்லாம், நிறைந்து விளங்கும்," என்று. அதுபோல, ஜூலை 4, ஒவ்வோராண்டும், அமெரிக்காவில் கருதப்படுகிறது. ஜூலை 4-க்கு எவ்விதத்திலும் சளைத்ததல்ல ஆகஸ்டு 15!...... ஆனால்... அதுபோல, இங்கு, வீடுகள்தோறும் விழாக் கோலமுண்டா? ஒவ்வொருவரின் உள்ளத்திலும் "இன்று ஓர் உயரிய நாள்", என்கிற உணர்ச்சியும் பேரானந்தமும் அலைமோதுகிறதா?—நிச்சயமாக இல்லையென்போம். வர்ண விளக்குகள்! வாண வேடிக்கைகள்! போலீஸ் பவனி! கூட்டங்கள்! குழந்தைகளுக்குத் தின்பண்டங்கள்! எல்லாம்—நிகழ்கிறது, ஜொலிக்கும் விளக்கலங்காரம் கண்களைப் பறிக்கிறது, தேசியத் தலைவர்கள் எழுப்பும் சங்கநாதம் சுதந்திரத்தின் அருமையை உணர்த்துகிறது. ஆனால், விழா நடக்கிறதா, நடத்தப்படுகிறதா எனின் நடத்தப்படுகிறதே ஒழிய நடைபெறவில்லை. கழனியில் உழைக்கும் காத்தமுத்துவோ, ஆலைத் தொழிலாளி ஆண்டியப்பனோ, கூடை தூக்கிச் செல்லும் குஞ்சம்மாவோ, இந்த நாளை ஒரு திருநாளாகக் கொண்டாடுகிறார்களா? கிடையாது! விளக்கு அலங்காரம் போலீசார் ஊர்வலம் முதலியவைகளை வேடிக்கைப் பார்க்க வேண்டுமானால் வருகிறார்கள்—அங்கே செய்யப்படும் சர்க்காரின் சாதனைகள் பற்றிய விளம்பரங்களைக் கண்டதும், "பொய்! பொய்!! என்ன சுதந்திரம் வந்து என்ன? எண்ணெயில்லாத தலையும், சோறு இல்லாத வயறும்தான் எனக்குச் சொந்தமாயிருக்கிறது" என்று சலித்துக்கொள்கிறானே ஒழிய களிப்பில்லை. கான மயிலாக வேண்டியவன், வானத்தை அண்ணாந்து பார்த்து பெருமூச்சு விடுகிறான்! ஆண்டுகள் பத்தாயினவே ஒழிய, அவனுடைய வாழ்வில், இன்னும் சுகம் அரும்பவில்லை. வெள்ளையன் வெளியேறுவதற்கு முன்பு என்ன நிலைமையிருந்ததோ, அது சற்றும் மாறவில்லை. வெள்ளைக்கார கவர்னருக்குப் பதில், இங்கே இருப்பவர்கள் கவர்னராக இருக்கிறார்கள்! வெள்ளைக்காரர்கள் வீற்றிருந்த இடங்களிலே, இங்கே இருப்பவர்கள் மந்திரிகளாக அமர்ந்திருக்கிறார்கள்! இந்தக் காட்சி மாற்றத்தைத் தவிர, அவன் கண்ட கனவேதும், நனவாகவில்லை. பசி, குறையவில்லை—கண்களில், புத்தொளி பூக்கவில்லை—கல்வியின் மணம் எளிதில் கிடைத்திடவில்லை—இடுப்பொடியும் ஏழையின் நிலையில் எவ்வித மாறுதலும் இல்லை—கொடுக்கும் வரிச்சுமையின் பளு கொஞ்சமும் குறையவில்லை.

"சுதந்திரம்" என்னென்ன இன்பங்களைக் கொண்டு வந்து குவிக்கும் என்று ஏக்கம் நிறைந்த கண்களுடன் எதிர்பார்த்தானோ, அந்த நம்பிக்கைகள் காற்றிலே கட்டிய கோட்டைகளாவிட்டன. கவலை, நிரம்பியதாகிவிட்டது வாழ்வு! அவலம், அகற்றப்படவில்லை, சிறிதும்! — ஆகவேதான், இயற்கையாகவே, அவன் இதயத்தில், இன்பம் எழவில்லை. இல்லங்களும், விழாக்கூடங்கள் ஆகவில்லை,

முதலாண்டு—இரண்டாம் ஆண்டு — மூன்றாம் ஆண்டு என்று ஒவ்வோராண்டும் விளக்கொளி போட்டும், ஆடம்பரத்துடனும் விழா கொண்டாடுமாறு உத்திரவிட்டு, உற்சாகம் காட்டிய காங்கிரஸ் பீடத்தினர், நாட்டில் சுகம் மலரவில்லை என்பதைக் கண்டதால், கடந்த இரண்டு மூன்றாண்டுகளாக, அவ்வளவு உற்சாகம கொள்ளவில்லை. அரசாங்கக் கட்டிடங்களில் அவ்வளவு தீபாலங்காரம் தேவையில்லை — சுதந்திர நாளுக்காக நிறையப் பணச் செலவு செய்யவேண்டாம்—ஆடம்பரம் அவசியமில்லை — அநாவசியப் பவனிகள் நடத்த வேண்டாம் என்றிருந்தனர்.

ஆனால், இந்த ஆண்டு, 1857-ம் வந்து சேரவே, நூற்றாண்டு விழாவையும் பத்தாண்டு விழாவையும் சேர்த்துக் கொண்டாடுமாறு உத்தரவிட்டிருக்கின்றனர். அதன் காரணமாக, ஆகஸ்டு 15, இந்த ஆண்டு அதிக விமரிசையாக நடத்தப்பட்டிருக்கிறது. சர்க்காருக்குச் சொந்தமான தந்தி தபால் நிலையங்கள், இரயில்வே மாளிகைகள், தாலுக்காக் கூடங்கள், போலீஸ் நிலையங்கள், எல்லாம் சுதந்திர நாளை, விழா நாளாககி இருக்கின்றன. அதிகாரிகள் யாவரும், சர்க்காரின் உத்தரவைச் சிரமேற் தாங்கி வசூலித்து, விழா கொண்டாடி இருக்கிறார்கள். சர்க்காரது பணிமனைகளுக்கு அடுத்தபடியாக, வியாபார வேந்தர்களும், ஆலையரசர்களும், இந்த நாளைக் கொண்டாடியிருக்கிறார்களே ஒழிய, விழாக் கோலம் எங்கு அமைய வேண்டுமோ, யாருடைய உள்ளத்திலே - அமெரிக்க ஆடம்ஸ் கூறியதுபோல - உவகையும் ஆனந்தமும் சுரக்கச் செய்ய வேண்டுமோ, அங்கு ஏற்படவில்லை. "இப்படியாவது ஏற்படாதா!" என்கிற ஆசையின் காரணமாகவே, இந்த ஆண்டு, ஆங்காங்கு கலையரங்கங்களையும், இசைக் கூத்துகளையும் ஏற்பாடு செய்திருக்கின்றனர். சென்னையில் ஒரு பக்கத்தில் இலவச நாடகம், இன்னொரு இடத்தில் இன்னிசை, வேறொரு பகுதியில் இலவச சினிமா—என்றெல்லாம் நடத்தினர். வானொலியில் பேசிய முதலமைச்சர் காமராஜர்கூட, 'கீதம்' பற்றியும் 'சுருதி' குறித்தும் பேசுகிற அளவுக்கு கலையின் துணையை நாடியிருக்கின்றனர், ஆட்சியாளர்கள்!!

சுதந்திரத்தின் அருமை குறித்தும், அதன் பெருமையினை மக்கள் அறியச் செய்யவும், ஆட்சியாளர் எடுக்கும் உற்சாக விழாக்களைக் குறை கூறவில்லை நாம். சுதந்திரம் கொண்டுவந்தவர்களுக்கு, அந்த நாளைச் சிறப்பாகக் கொண்டாடவேண்டும் என்கிற ஆசையும் ஆர்வமும் இருக்கத்தான் செய்யும். அதன் காரணமாகவே, 1857 கிளர்ச்சியையும் இந்த ஆகஸ்டோடு சேர்த்து, எழிலும் ஒளியும் உண்டாக்க முனைந்திருக்கிறார்கள். ஆனால், பாபம்! எழில், சர்க்கார் கூடங்களோடு நின்றுவிட்டது — ஒளி, ஒவ்வொரு இல்லத்திலும், பூக்கவில்லை. வழக்கம்போல, மக்கள், வேடிக்கைக் காட்சியினைப்போல ரசிக்கின்றனரே ஒழிய, சுதந்திரம் தமக்கு வந்திருப்பதாகக் கருதி விழாக்கோலம் பூணவில்லை.

இது ஏன்?—என்பதையே, தியாகம் பல புரிந்த செம்மல்கள், எண்ணிடவேண்டும் என்று அன்று முதல் எடுத்துக் கூறி வருகிறோம். எங்கு ஒளி ஏற்படவேண்டுமோ, அந்த ஏழை மகனின் கண்களில்

(13-ம் பக்கம் பார்க்க)

★ 1967 ★

நான் இங்கே பேசவேண்டும் என்று நம்முடைய நண்பர்களாகக் கொடுத்திருக்கிற தலைப்பு 1967 - என்பது. நானாகத் தேர்ந்தெடுத்துக்கொண்ட தலைப்பு அல்ல; நம்முடைய நண்பர்களாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டது. அவர்களாகத் தேர்ந்தெடுத்தது என்று கூட நான் கருதவில்லை, நம்முடைய மாநில நிதியமைச்சர் அவர்கள் ஒரு பத்து ஆண்டுக்கு நீங்கள் எல்லாம் 'சும்மா' இருங்கள் என்று சட்டசபையிலே சொன்னதை மனதிலே வைத்துக் கொண்டு தேர்ந்தெடுத்தார்கள் என்று கருதுகின்றேன்.

நாட்டுப் பிரிவினையில் இந்தப் பத்து ஆண்டு 1957-லிருந்து கூட்டினால் 1967 ஆகின்றது. இந்தப் பத்தாண்டில் என்ன நடைபெறக் கூடும் என்பதைக் கேட்கத்தான் இந்தத் தலைப்பைக் கொடுத்திருக்கக்கூடும் என்று கருதுகின்றேன்.

நம்முடைய தலைவர் அவர்கள் செவியில் 1957—1967 என்ற சொற்கள் விழுந்தவுடன் 1917-க்கு அவருடைய சிந்தனை சிறகடித்துப் பறந்ததை இங்கே எடுத்துச் சொன்னார்கள்.

உண்மையிலேயே தமிழகத்தில் 1917-ல் ஒரு பெரிய புரட்சிக்கு முதல் கட்டம் நடத்தப்பட்டது. அது ஒரு பெரிய புரட்சி என்பது நமக்கெல்லாம் தெரியாமல் போனதற்குக் காரணம் நம்மிலே பலபேர் 1917 - ல் அரசியல் அலுவல்களைக் கவனிக்கக்கூடிய பருவத்திலே இருந்தவர்கள் அல்ல. அதிலும் குறிப்பாகத் தி. மு. கழகத்திலே இன்றையதினம் ஈடுபாடு கொண்டவர்களிலே பலபேர் அந்த நாட்களிலே தொட்டிலிலே படுத்துத் தூங்கிக்கொண்டிருந்த குழந்தைகளாக இருந்திருப்பார்கள். ஆனால் இன்றைய தினம் நம்மிடையே என்னென்ன மாதிரியான எழுச்சிகள் காணப்படுகின்றனவோ, இன்றையதினம் எங்கெங்கு வாலிபத் தோழர்கள் உற்சாகமாக ஒரு கொள்கைக் காகத் தங்களைத் தாங்களே ஒப்படைத்திருக்கிறார்களோ அதைப் போல் அப்பொழுது 1917-ல் ஒரு மாபெரிய மனஎழுச்சி நம்முடைய தமிழகத்திலே ஏற்பட்டது.

அது தொடர்ந்து நடைபெறாமல் போனதற்குக் காரணங்கள் பல இருக்கின்றன. அந்தப் புரட்சி பிற்காலத்திலே ஒடுக்கப்பட்டதற்கான சூழ்நிலைகள் நம்மாலே சரியான முறையிலே இன்னும் கணிக்கப்படவில்லை.

> மதுரையில் 11—8—57-ல் ஞாயிறு காலை 10-மணிக்கு சி. என். ஏ. ஆற்றிய சிறப்புச் சொற்பொழிவு தரப்படுகிறது.

1917-ல் தான் நம்முடைய தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்னபடி தமிழ் நாடு உண்மையிலேயே தன்னை உணரத் தலைப்பட்டது. தான் ஒரு தனி இனம் என்பதையும் தன்னுடைய இனம் தாழ்த்தப்பட்டிருக்கிறது என்பதனையும், அந்த இனம் தாழ்த்தப்பட்டிருந்தாலும் அது மறுபடியும் தளைகளை உடைத்துக்கொண்டு முன்னேற முடியும் என்ற தன்னம்பிக்கையையும் 1917-லே பெற்றது.

நாம் எல்லாம் எப்படி திராவிட இயக்கத்திலே ஈடுபாடு கொண்டிருக்கிற நேரத்தில் கல்லூரிகளிலே படிக்கிற மாணவர்களாகவும், உயர்நிலைப்பள்ளிகளிலே படிக்கின்றவர்களாகவும் இருந்து இதிலே ஈடுபாடு கொண்டோமோ அதைப்போல இந்த 1917-லே இன்றையதினம் தலைமை வகித்திருக்கின்ற நம்முடைய நண்பரவர்கள் சென்னையிலே சட்டக் கல்லூரியிலே படித்துக்கொண்டிருக்கிற மாணவராக இருந்து அதிலே ஈடுபாடு கொண்டிருந்தார்கள். இதைப்போல எண்ணற்றவர்கள் தமிழ் நாட்டிலே பார்ப்பனரல்லாதார் இயக்கத்திற்கு உறுதுணையாக இருந்தார்கள். அப்படித் தோற்றுவிக்கப்பட்ட அந்த இயக்கம் பார்ப்பனரல்லாதார் இயக்கம் என்று பொதுப்படையாக ஆரம்பிக்கப்பட்டாலும் அதனுடைய அடிப்படையிலே மூன்று கருத்துக்கள் அப்பொழுதே கருவுருவில் இருந்தன. பார்ப்பனரல்லாதார் முன்னேறவேண்டும் என்பதை அவர்கள் வெளிப்படையாகவும் மிகைப்படுத்தியும் பேசிக்கொண்டிருந்தார்கள் என்று கூறப்பட்டாலும், பார்ப்பனரல்லாதார் எந்தெந்தத் துறையிலே முன்னேறவேண்டும் என்பதையும், அவர்கள் அந்தந்தத் துறைகளிலே முன்னேறாமல் போனதற்குக் காரணங்கள் என்ன என்பதனையும், அந்தக் காரணங்களைக் கண்டுபிடித்தான பிறகு அந்தக் குறைபாடுகளை யெல்லாம் நீக்கி நிறைபடுத்தி, மறுபடியும்

1917–நம் 'புரட்சி'யின் முதல் கட்டம்

பார்ப்பனரல்லாதார் சமுதாயம் எப்படி முன்னேற முடியும் என்பதற்கான வழிவகைகளையும் அன்றையத்தினமே ஆய்ந்தறிந்திருக்கிறார்கள். அந்த நேரத்தில் அவர்கள் அரசியல் துறையை மறந்து விடவில்லை — பொருளாதாரத் துறையையும் இழந்துவிடவில்லை —சமுதாயத் துறையைப் பற்றியும் அக்கறை காட்டாமலில்லை. டாக்டர் நாயர் அவர்கள் இத்தனை கருத்துக்களையும் ஒருருவாகத் திரட்டி எடுத்த ஒரு மாபெரும் புரட்சித் தந்தையாக அன்றைய தினம் விளங்கினார்கள். ஆனால் தமிழ் நாட்டில் எப்படி நாம் நம்முடைய மன்னர்களை மறந்துவிட்டிருக்கின்றோமோ, எப்படி ஒரு மன்னனுடைய மகன் யாரெனறு சரித்திர புத்தகங்களைப் புரட்டினால் வரகுண பாண்டியன் மகன் இரண்டாவது வரகுண பாண்டியன் என்று போட்டு, இது இல்லையென்பாரும் உண்டு என்று அடியிலே குறிப்புத் தரும் வகையில் குழப்பமான வரலாற்றை வைத்திருக்கிறோமோ, அதே முறையிலேதான் டாக்டர் நாயரைக்கூட இன்றையதினம் நாம் சரியாக உணர்ந்துகொள்ளவில்லை.

அதற்குக்காரணங்கள் இரண்டு என நான் நினைக்கின்றேன். 1917-ல் ஏற்பட்ட பரபரப்பான அரசியல் நிகழ்ச்சிகளைவிட, மிகப் பரபரப்பான அரசியல் நிகழ்ச்சிகள் இடைக்காலத்தில் ஏற்பட்டன. மற்றும் ஒன்று நம்முடைய தமிழ்ப் பண்புக்கு ஏற்றபடி நம்முடைய அருமை பெருமைகளை நாம் குறித்து வைத்திருக்கின்ற பழக்கத்தை நெடுங்காலமாக இழந்து விட்டோம். இன்றைய தினம் ரோம் நாட்டு வரலாற்றை நீங்கள் துருவிப் பார்க்க வேண்டுமென்றால் ஜூலியஸ் சீசர் அணிந்து கொண்டிருந்த கால் செருப்பின் அளவிலேயிருந்து, கிளியோபாட்ரா அணிந்திருந்த காதணி வரை வரலாற்றுக் குறிப்பு உண்டு. ஆனால் தமிழகத்தின் வரலாற்றை நீங்கள் பார்க்க வேண்டுமென்றால், இந்த மண்டலத்திலே ஆண்டுகொண்டிருந்த மன்னன் இன்னாருடைய மகன் என்று கூறுவதற்கு, இரண்டு மூன்று வரலாற்று ஆசிரியர்களும், நான்கைந்து தமிழ்ப் புலவர்களும், பத்துப் பதினைந்து திங்கள் சேர்ந்து உட்கார்ந்தாலும், ஆளுக்கொரு செய்தியைத்தான் தரமுடியுமேதவிர, அத்தனைபேரும் ஒத்த கருத்தைத் தரமுடியாத ஒரு நிலை இருக்கிறது. அதற்குக் காரணம் புலவர்களிடையே புலமைக் குறைவு என்று அர்த்தமல்ல! நம்முடைய முன்னோர்கள், மனிதர்களுடைய செயல்களைக் குறித்துவைப்பது இழுக்கு என்ற ஒரு தவறான கருத்திலே குறித்து வைக்காமல் போய்விட்டார்கள். 1917-லே துவக்கப்பட்டு தென்னகம் முழுவதிலும் பெரும் காட்டுத்தீ என்று எதிரிகள் சொன்னதைப் போலப் பரவி, இங்கிலாந்திலே சாய்வு நாற்காலியிலே சாய்ந்துகொண்டிருந்த அரசியல் தத்துவ ஆசிரியர்களைக் கூட, கண்களை அகலத் திறக்கச் செய்த டாக்டர் நாயருடைய வரலாறு நமக்குக் கிடைக்காமலிருப்பதிலே ஆச்சரியமில்லை.

டாக்டர் நாயர் குறித்து இன்றைய தினம், புதிதாக திராவிட இயக்கத்திலே ஈடுபாடு கொண்டிருப்பவர்களுக்கு, ஏதோ நான் சொல்லுகிறேன் என்பதற்காக உபசாரத்திற்குக் கேட்டுக்கொண்டிருக்கிறார்களே தவிர, டாக்டர் நாயரைப் பற்றி எண்ணுகின்ற நேரத்தில் என்னுடைய மனதிலே ஏற்படுகின்ற மன எழுச்சி, என்னுடைய மனதிலே ஏற்படுவதைவிட நம்முடைய தலைவர் மனதிலே ஏற்படுகின்ற மன எழுச்சி உங்களில் பலருக்கு ஏற்படாது. ஏற்படாதது உங்களுடைய குறையல்ல — நாம் நம்முடைய வரலாற்றை தொகுத்து வைக்காததால் ஏற்பட்ட குறைதான்! டாக்டர் நாயர் அவர்கள் அரசியல் துறையிலேயும், பொருளாதாரத் துறையிலேயும், சமுதாயத் துறையிலேயும் சேர்ந்து பணியாற்றிய ஒரு பெரும் தலைவர் ஆவார்கள்.

பிற்காலத்திலே வந்த ஜஸ்டிஸ் இயக்கம் இந்த மூன்றையும் ஒன்றாக அழைத்துச் செல்லத் தவறியதனால்தான் நாட்டுமக்களாலே ஓரளவுக்குப் புறக்கணிக்கப்பட்டது. டாக்டர் நாயர் இந்த மூன்றையும் சம எடையில், ஒரு சேர இழுத்துச் சென்றும் மூன்று துறைகளிலேயும் புரட்சி மனப்பான்மை ஊட்டிய காரணத்தாலே தான், அந்த நாட்களிலே கல்லூரிகளிலே படித்துக்கொண்டிருந்த மாணவர்கள் டாக்டர் நாயர் பேசுகிறார் என்றால், திருவல்லிக்கேணி கடற்கரை கூட்டத்தில் திராவிடர் இயக்கக் கூட்டங்கள் நடைபெற்றால் எவ்வளவு ஆர்வத்தோடு வருகிறார்களோ அத்தனை ஆர்வத்தோடு வந்தார்கள்.

இன்றைய தினம் திராவிடர் இயக்கத்தை எப்படி காங்கிரஸ் தலைவர்கள் கருவறுத்துவிட வேண்டும் என்று கூசாது, அஞ்சாது பல பழிகளைச் சுமத்துகிறார்களோ, அப்படிப்பட்ட பல பழிச்சொற்களையெல்லாம் டாக்டர் நாயர் பேரிலும் சுமத்தி இருக்கின்றார்கள். எப்படி இத்தனை பழிச்சொற்களைத் தாண்டி திராவிடர் இயக்கம் இன்றைய தினம் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறதோ, உயிர் வாழ்வது மட்டுமல்ல, புது வலிவினைப் பெற்றுக் கொண்டு வளர்ந்துவருகின்றதோ, அதைப்போலவே டாக்டர் நாயர் அவர்களும் அந்தப் பழிச் சொற்களையெல்லாம் தாண்டி, அவர் வாழ்ந்திருந்த காலம் வரையில்—அவர் தமிழ் நாட்டினுடைய துர்ப்பாக்கிய வசத்தால் அதிக காலம் வாழ்ந்திருக்கவில்லை — வாழ்ந்திருந்த காலம் வரையிலே மாற்றார்கள் வீசியெறிந்த கணைகளைத் தாங்கக்கூடிய நெஞ்சுரத்தைப் பெற்றிருந்தார். ஒரு தடவை டாக்டர் நாயர் அவர்களை காங்கிரஸ் இயக்கத்தைச் சார்ந்த பெரும் தலைவர்கள் — மைலாப்பூரையும், திருவல்லிக்கேணியையும் சேர்ந்தவர்கள் — கேலியாகச் சொன்னார்கள்—டாக்டர் நாயரைப் போன்றவர்களெல்லாம் வெள்ளைக்காரனுக்குத் துதிபாடிக் கொண்டிருக்கிறார்கள்; வெள்ளைக்காரனுக்குத் தாசனாக இருக்கின்றார்கள், வெள்ளைக்கார ஏகாதிபத்தியத்தைத் தாங்குகின்றார்கள் என்று. டாக்டர் நாயர் சொன்ன வாசகத்தை நான் அவர்களுடைய வரலாற்றுக் குறிப்புகளிலே

நான்கு மொழியினரும் உருவாக்கிய நீதிக்கட்சி

யிருந்து படித்துப் பார்த்திருக்கிறேன். அவர் சொல்லியிருக்கின்றார் "தேசியம் பேசுகின்ற என்னுடைய காங்கிரஸ் நண்பர்கள் இந்தியாவிலே சம்பாதிக்கின்ற பணத்தை இங்கிலாந்திலே கொண்டுபோய்ச் செலவழிக்கிறார்கள்—நான் இங்கிலாந்திலே வைத்திய சாலை நடத்தி இங்கிலீஷ்காரன் பணத்தைச் சம்பாதித்துக் கொண்டு வந்து இந்தியாவிலே செலவழிக்கிறேன். நான் உண்மை தேசியவாதியா, இவர்கள் உண்மையான தேசீய வாதிகளா" என்று கேட்டார். ஏனென்றால் டாக்டர் நாயர் அவர்களுக்கு இங்கிலாந்து நாட்டில் பிரபலமான மருத்துவர்கள் குடியிருக்கின்ற வீதியில் ஒரு மருத்துவ மனை இருந்தது. அவர் அறுவை மருத்துவத்திலே சிறந்த நிபுணர் — ஆகையினாலே அவருடைய வருகைக்காக ஆங்கிலேயர்கள் கூட அங்கே காத்துக் கொண்டிருப்பார்கள் — ஆண்டிலே மூன்று நான்கு திங்கள் அவர் இங்கிலாந்திற்குச் சென்று நோயாளிகளைக் கண்டு மருத்துவம் செய்து அரசியல் நிலைமைகளையும் அறிந்துகொண்டு பணத்தைச் சம்பாதித்துக் கொண்டு வந்து இங்கே செலவழித்தார்கள். இதனை அவர் எடுத்துச் சொன்னார் என்று நான் படித்துப் பார்க்கின்ற நேரத்தில் எவ்வளவு பெரிய நெஞ்சுரம் படைத்தவர் 1917-ல் தமிழர்களுக்குக் கிடைத்திருந்தார்கள் என்பதை எண்ணி எண்ணி மனம் பூரிப்பாலே விம்ம வேண்டியிருக்கிறது.

மற்றொரு தடவை டாக்டர் நாயர் அவர்கள் இந்த நாட்டுத் தேசிய வாதிகளாலே கண்டிக்கப்பட்ட நேரத்தில் அவர் வெளிப்படையாகச் சொன்னது அந்தக் காலத்து ஆங்கிலப் பத்திரிகையிலே வெளிவந்தது. திராவிட நாட்டினுடைய — கருத்துக் கரு வூலம் அதிலே இருப்பதை நான் கண்டிருக்கிறேன்.

அவர் எழுதியிருக்கிறார், "எந்த நேரத்திலானாலும் சரி, At any time Tamilians willprefer London to D.lhi. என்று தெளிவாக எழுதியிருக்கின்றார். நீ லண்டனிலே அடிமைபட்டிருக்கிறாயா? டெல்லிக்கு அடிமைப்பட்டிருக்கிறாயா? என்று கேட்டால் தென்னிந்தியர்களாகிய நாங்கள் வேண்டுமானால் லண்டனுக்கு அடிமைப்பட்டிருந்து விடுதலை பெறுவோமே தவிர டெல்லிக்கு அடிமைப்பட்டிருக்க மாட்டோம் என்று டாக்டர் நாயர் அவர்கள், அன்றைய தினமே எழுதிவைத்திருக்கிறார்கள்.

டாக்டர் நாயர் அவர்கள்தான் திராவிட இன உணர்ச்சி தமிழகத்திலே பரவுவதற்கு வித்தூன்றினார். அவர் பிறந்தது கேரளம், அவர் வாழ்ந்தது தமிழகம், அவர் உழைத்தது தமிழருக்கு —டாக்டர் நாயரைத் தமிழகத்திலே அறிந்திருப்பதைப்போல் கேரள நாட்டிலேகூட அதிகம் அறிந்திருக்கமாட்டார்கள்.

ஏனென்றால் அவர் வாலிபப் பருவம் அடைந்ததும் கேரள நாட்டை விட்டுத் தமிழகத்திலேயே குடியேறினவர். அந்த நாட்களிலே நம்முடைய நீதிக் கட்சித் தலைவர்கள் மலையாள நாட்டைச் சேர்ந்த டாக்டர் நாயரும், ஆந்திர நாட்டைச் சேர்ந்த பெருந் தலைவர்களும், தமிழ் நாட்டைச் சேர்ந்த தலைவர்களும் கன்னட நாட்டைச் சேர்ந்தவர்களும்—அப்போது ஒரிசாவும் நம்மோடு ஒன்றாக இணைந்திருந்த காரணத்தால் —ஒரிய நாட்டுத் தலைவர்களும்— இத்தனைபேரும் ஒன்றாகச்சேர்ந்து பணியாற்றினர். அவர்கள் இயக்கத்துக்கு இட்ட பெயரே South Indian Liberal Fedara-ration தென்னிந்திய விடுதலைச் சங்கம் (நல உரிமைச் சங்கம்) என்பதுதான். தென்னிந்தியா என்பதைத்தான் வலியுறுத்தினார்கள். ஆனால் பிற்காலத்தில் நீதிக்கட்சி விரிவடைவதாகக் கருதிக் கொண்டு தென்னிந்தியா என்பதை அவர்கள் இன்னமும் விரிவு படுத்தி பம்பாய்க்குச் சென்று ஒரு மாநாட்டையும், கோலாப்பூருக்குச் சென்று ஒரு கிளையையும், கல்கத்தாவில் ஒரு கிளையையும் வைத்து தென்னிந்திய என்கிற சிறப்பைத் தாங்களாகவே இழந்தார்கள். அதனாலேதான் நீதிக்கட்சி பிற்காலத்திலே கெட்ட நிலைமை அடைய நேரிட்டதே தவிர அதற்குவித்து ஊன்றியவர் நல்ல வித்துதான் ஊன்றியிருக்கிறார். நல்ல கருத்துக்களைத்தான் தந்திருக்கிறார் என்பதை இன்றைய தினம் நம்முடைய தலைவர் அவர்கள் எடுத்துச் சொல்லிக்கொண்டு வந்த நேரத்தில் நான் எண்ணிப் பார்த்தேன்.

நீங்கள் எல்லாம் மிக நன்றாக அறிவீர்கள் காங்கிரஸ் தலைவர்கள் திராவிட இயக்கத்தவரையும் அதிலும் குறிப்பாக என்னையும் தூற்றுவதற்காகக் கிளம்புகின்ற நேரத்தில் அவர்கள் சொல்லுகின்ற ஒரே ஒரு குற்றச்சாட்டு இந்த அண்ணாத்துரையை நாங்கள் அறியமாட்டோமா— இவன் நீதிக்கட்சிக்காரன்--என்று சொல்லியிருப்பதை நீங்கள் கேட்டிருக்கிறீர்கள்.

அவர்கள் சொன்ன அத்தனை நேரத்திலேயும், தெளிவாக, திட்டமாகச் சொல்லியிருக்கின்றேன் நான் நீதிக் கட்சியிலே ஈடுபாடு கொண்டிருந்தவன் என்று எடுத்துச் சொல்லிக்கொள்வதிலே வெட்கப்படவுமில்லை, வேதனையடையவுமில்லை என்று. நான் தமிழகத்து மேடைகளிலே பல தடவை சொல்லியிருக்கிறேன். அதுமட்டுமல்ல நீதிக்கட்சி இயக்கம் எந்தக் கட்டத்தை அடைய வேண்டுமோ அந்தக் கட்டத்தை அடைவதற்கு என்னாலான பணியை நான் செய்திருக்கின்றேன் என்பது என்னுடைய உள்ளத்திற்கும் தெரியும் தமிழ் நாட்டு அரசியல் நிலைமைகளை ஆராய்ந்தவர்களுக்கும் தெரியும்.

ஆகையினாலே தி. மு. கழகம் நீதிக் கட்சியினுடைய வழிவழி வந்தது என்று காங்கிரஸ்காரர்கள் சொன்னால் அதைக் குறித்து நான் வருத்தப்படுவதுமில்லை— வெட்கமடைவதுமில்லை.

ஏனென்றால் நீதிக்கட்சி இயக்கம் என்பது பிற்காலத்திலே அது பட்டம் பதவிகளைத் தேடுகின்றவர்களும் 'சட்டத்தினுடைய துணையைத் தேடுகின்றவர்களும் சட்டசபையிலே இடம் பெற்றால் மட்டும் போதுமென்ற எண்ணம்

காலம் கனியவில்லை அப்போது

கொண்டவர்களும் மட்டும் கொண்டதாகிவிட்டது. ஒரு காலத்தில் — துவக்கப்பட்ட காலத்திலே — பாமர மக்களை ஈடேற்றுவதற்காகவும், பார்ப்பனர் அல்லாத சமுதாயத்தைக் கடைத்தேற்றுவதற்காகவும் பார்ப்பனர் அல்லாத சமுதாயம் பொருளாதாரத் துறையிலேயும், அரசியல் துறையிலேயும் விடுதலை யடைந்து முன்னேற்றம் அடையவேண்டும் என்பதற்காகவும் துவக்கப்பட்ட ஒரு இயக்கமே தவிற வெறும் பட்டத்திற்காக மட்டும் துவக்கப்பட்ட இயக்கமல்ல. ஆகையினாலே அந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்களென்று ஒத்துக்கொள்வதிலே எந்தவகையிலும், யாருக்கும் இழுக்கு இல்லை —அந்த இயக்கம் பிற்காலத்தில் யானை கூட சேற்றிலே அழுந்திவிட்டால் ஒரு கால் சேற்றில் இறங்கிவிட்டால், அதை மூன்று காலாலே தூக்க ஆரம்பித்தால், அந்த மூன்று கால்களும் சேற்றிலே அழுந்தி யானை வெளியிலே வராமல் இருப்பதைப்போல்— ஜஸ்டிஸ் கட்சி பிற்காலத்தில் மக்கள் இயக்கத்திலே இருந்து கொஞ்சம் கொஞ்சமாக விடுபடவேண்டியிருந்தது — விலகவேண்டியிருந்தது. அதற்குக் காரணம் ஜஸ்டிஸ்கட்சி எடுத்துச் சொல்லிக்கொண்டிருந்த தத்துவங்களை, கருத்துக்களை புரிந்துகொள்ளுமளவுக்கு நாட்டிலே அந்த நாட்களில் கல்வியறிவு பரவவில்லை.

எனக்கே நன்றாக நினைவிலே இருக்கின்றது. கடப்பையில் நடைபெற்ற ஒரு மாநாட்டில் — நான் அப்போது தமிழ் நாட்டில் மிக அதிகமாகப்பேசப்பட்டு வந்த திலகர் சுயராஜ்ய நிதி மோசடி வழக்கைப்பற்றி ஒருமணிநேரம் பேசினேன்—ஆங்கிலத்தில்; அப்போது எனக்குப் பக்கத்திலே, ஜஸ்டிஸ் கட்சியிலே அப்போது தலைவராக இருந்த பொப்பிலி அரசரும் வேறு பல ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களும் வீற்றுக்கொண்டிருந்தார்கள். ஜஸ்டிஸ் கட்சியினுடைய பிரமுகர் ஒருவர் பக்கத்திலே அமர்ந்திருந்தார். ஒரு மணி நேரம் நான் — திலகர் சுயராஜ்ய நிதி என்ற பெயராலே ஒரு கோடி ரூபாயை வசூலித்து அந்த ரூபாயிலே பெருத்த மோசடிகள் ஏற்பட்டதையும், அந்த மோசடிகளை விளக்கி மராட்டிய நாட்டிலே இருந்து வெளியிடப்பட்ட "மராட்டா" என்ற பத்திரிகையில் தொடர்ச்சியாகத் தலையங்கம் எழுதப்பட்டதையும், எடுத்துச் சொன்னேன். சொல்லிவிட்டு மாநாடு பிற்பகலுக்குக் கலைந்து சாப்பாட்டுக்குப் போகிற நேரத்தில், ஜஸ்டிஸ் கட்சியினுடைய பிரமுகர் என்னுடைய தோளிலே கைபோட்டுக்கொண்டு சொன்னார் "அண்ணாதுரை! நீ நன்றாகத்தான் பேசுகிறாய்! ஆனால் எதற்காக இவ்வளவு பெரிய அண்டப் புளுகு சொன்னாய்?" என்று என்னைக் கேட்டார். நான் அப்படியே அதிர்ச்சி அடைந்துபோய் "ஐயா நான் என்ன பேசினேன்—நீங்கள் எதைக் கூறுகிறீர்கள்" என்றேன். "என்ன ஒரு கோடி ரூபாயை காங்கிரஸ்காரர்கள் வசூலித்தார்கள். அதை எப்பம் விட்டுவிட்டார்கள் என்று சொன்னாயே! இப்படிச் சொல்லலாமா? எப்பொழுது அவர்கள் வசூலித்தார்கள்? எங்கே எப்பம் விட்டார்கள்?" என்று கேட்டார். நான் சொன்னேன் "ஐயா, நம்முடைய ஜஸ்டிஸ் பத்திரிகையிலேயே T. A. V. நாதன் அவர்கள் அருமையாக ஒரு ஆறு தலையங்கம் எழுதியிருக்கிறாரே, படிக்கவில்லையா?" என்றேன். "நான் ஜஸ்டிஸ் பத்திரிகை படிக்கிற வழக்கமில்லை" என்றார். அப்படிப்பட்ட தலைவர்கள் வந்த பிறகுதான் ஜஸ்டிஸ் கட்சி கீழே விழுந்ததே தவிர வேறில்லை.

ஜஸ்டிஸ் கட்சியை அப்படிப்பட்ட தலைவர்கள் கரத்திலேயிருந்துவிடுவிக்கவேண்டுமென்றுதான் சேலத்திலே நான் முயற்சி செய்தேன் — ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கையை அழிக்க வேண்டுமென்றல்ல.

பார்ப்பனரல்லாதார் இயக்கம் சமநீதி காணும் நோக்குடன் என்று துவக்கப்பட்டதே தவிர அது பார்ப்பனர்களை தனிப்பட்ட முறையிலே வெறுத்ததில்லை. என்பேரிலும் இப்போது பழி சொல்லுகிறார்களல்லவா அண்ணாதுரை இப்போது ஆறு மாதகாலமாக திடீரென்று பார்ப்பனர்களுக்கு வேண்டியவனாகிவிட்டான் என்று. நான் வேண்டியவனாக இருக்கிறேனோ இல்லையோ அது வேறு விவகாரம். ஆனால் உண்மையிலேயே பார்ப்பனர்களைத் தனிப்பட்ட முறையிலே வெறுக்கவேண்டிய அவசியமில்லை என்றும் பார்ப்பனர்களுக்கு என்று இருக்கின்ற உரிய பங்கைத் தந்து, பார்ப்பனரல்லாதாருக்கு என்று இருக்கின்ற உரிய பங்கு பார்ப்பனரல்லாதாருக்குக் கிடைக்கவேண்டும் என்ற நீதியை அடிப்படையாகக்கொண்டதால்தான் ஜஸ்டிஸ் கட்சிக்கு நீதிக்கட்சி என்றே தமிழிலே பெயரிடப்பட்டது. ஜஸ்டிஸ் கட்சியினுடைய அமைச்சரவை அமைக்கப்பட்ட நேரத்தில் சேதுரத்தினம் ஐயரென்ற ஒரு பார்ப்பனரும மந்திரியாக இருந்தார். அதை உங்களுக்கு நான் கவனப்படுத்துகிறேன்.

இப்படித் துவக்கப்பட்ட ஜஸ்டிஸ் கட்சி எதைச் செய்யத் தவறிவிட்டது என்றால் பார்ப்பனரல்லாதாரை, படித்து, பட்டம் பெற்று உத்தியோகத்துக்குப் போகின்ற பார்ப்பனரல்லாதார் மட்டும்தான் இருக்கிறார்கள் என்று தப்பாகக் கணக்கிட்டது. பார்ப்பனரல்லாத சமுதாயத்தில் B. A. படித்துவிட்டு வேலை கிடைக்காமல் — M. A. படித்துவிட்டு மேல் உத்தியோகத்துக்குப் போகவேண்டியவன், — தாசில்தாராக இருந்து கலெக்டர் உத்தியோகத்துக்கு "பரமோஷன்" கிடைக்கவேண்டியவன்-- இப்படிப்பட்ட சிலர்தான் பார்ப்பனரல்லாத சமுதாயத்திலே இருக்கிறார்கள் என்று கணக்குப் போட்டார்களே தவிர, கைவண்டி இழுக்கின்ற[illegible]தன், கடைவைத்துப் பிழைக்கின்[illegible] வரதன், வயலிலே வேலை செய்கின்றவன், ஒரு வேலையும் கிடைக்காதவன், உச்சிப் பொழுதுவரையிலும் பாடுபட்டாலும் ஒரு கவளம் சோற்றுக்கு வழியில்லாமல் மிராசுதாரரிடத்திலே அடிபடுபவன், கங்காணியினுடைய சவுக்கடியைத் தாங்குபவன், இங்கே பிழைப்பதற்கு வழியில்லாமல் சிலோனுக்குக் கூலியாக ஓடுபவன், இப்படிப்

பகை அல்ல நோக்கம்; சம நீதியே!

பட்ட பார்ப்பனரல்லாத பெருங்குடி மக்கள், ஏழைகள் இருப்பதை அவர்கள் காண மறுத்தார்கள்.

காண மறுத்ததற்குக் காரணம் இரண்டு இருக்கலாமென்று நான் நினைக்கிறேன். ஒன்று, நம்முடைய ஆட்சி ஏற்பட்டால், அவர்களை ஈடேற்றிவிடலாம் என்று கருதியிருக்கக்கூடும். மற்றொன்று, அவர்களைப் பற்றிய பிரச்சினைகளை ஏற்றுக்கொண்டால் இந்தப் பிரச்சினை கெட்டுவிடும் என்று அவர்கள் எண்ணியிருக்கலாம். ஆனால் நான் காஞ்சிபுரத்திலே கருடசேர்வை விழா நடக்கிறபோது பார்த்திருக்கிறேன். பார்ப்பனர்கள், அங்கே தாங்கமுடியாத ஒரு பெரிய குடையை அந்த வாகனத்தின் பக்கத்திலே வைத்துக்கொண்டு பிடித்துக்கொண்டிருப்பார்கள். வாகனமோ பளுவானது. அதைத் தூக்குகின்றவர்களோ, ஆடியசைந்து தூக்கிக்கொண்டு போவார்கள். இலட்சக்கணக்கான மக்கள் எதிரிலே நின்றுகொண்டிருப்பார்கள். எள் விழ இடமில்லை என்பார்களே பழமொழி, அதைப் போலிருக்கும். அந்தக் குடை கொஞ்சம் காற்றிலே ஆடினால் கீழே கவிழ வேண்டும். அந்த நேரத்தில் பார்ப்பனர்களை நான் உற்றுப் பார்த்திருக்கிறேன். அதிலும் வெற்றிலை பாக்கு போடுகின்ற பழக்கமுள்ள பார்ப்பனர், குடையோ விழாமல் வெற்றிலை பாக்குப் போட்டதை நான் பார்த்திருக்கிறேன். ரொம்ப லாவகமாய்ப் போடுவார். இரண்டு விரலாலே மட்டும் வெற்றிலையை எடுப்பார்— மற்றொரு விரலாலே சுண்ணாம்பைத் தடவுவார் — இப்படியே தடவிக்கொண்டிருப்பார் அதே நேரத்திலே பரிவிலே தெரிந்த பக்தர்கள்—பொருந்தப் பக்கமுள்ள பக்தர்கள் — பார்த்தால், அவர்களுக்கும் புன்னகையை பரிசாக அளிப்பார். வரதராஜப் பெருமானுடைய மகரக் கண்டிகையையும் பார்த்துக்கொள்வார். அதே நேரத்திலே புகையிலைக் காம்பு எங்கே இருக்கிறது என்பதையும் தேடிக்கொள்ளுவார்.

ஜஸ்டிஸ் கட்சி அந்த வித்தையைச் செய்யத் தவறிவிட்டது. அந்தக் கட்சி, படித்த பார்ப்பனரல்லாதாரை மட்டும் பார்த்தது. நான் சொன்ன உதாரணத்தின்படி, அதே நேரத்தில் ஏழை பார்ப்பனரல்லாதாரையும், இல்லாத கொடுமையினாலே வாட்டப்படுகின்ற பார்ப்பனரல்லாதாரையும் பார்ப்பதற்குத் தவறிவிட்டது.

அதனாலேதான், இனி அவர்களிடத்திலே அது இருந்தால், ஜஸ்டிஸ் இயக்கம் பாமர மக்கள் இயக்கம் ஆகாது என்று சொல்லி — அரண்மனையிலே பிறந்த குழந்தையானாலும எப்படி சித்தார்த்தர் அரண்மனையிலே பிறந்தாலும் அவர் புத்தமார்க்கத்தை ஏற்படுத்துவதற்குமுன்னால் அரசமரத்தடிக்கு வந்தாரோ அதைப் போல அரண்மனையிலே இருந்த ஜஸ்டிஸ் கட்சி, வெட்ட வெளிக்கு ஆலமரத்தடிக்கு, வந்தால்தான் அது மக்களுக்குப் பயன்படும் என்று கருதி சேலத்திலே நடைபெற்ற மாநாட்டில், அரண்மனையிலே இருந்த ஜஸ்டிஸ் கட்சியை பெரியார் ராமசாமி மிகப்பாடுபட்டு எங்களையெல்லாம் துணைக்கு வைத்துக்கொண்டு, ஆலமரத்தடிக்குக் கொண்டு வந்தார்.

ஆலமரத்தடிக்குக் கொண்டு வந்த பிறகு ஜஸ்டிஸ் இயக்கம் இன்றையதினம் நீண்ட நாளைக்கு ஆலமரத்தடியிலே இருந்துவிடக் கூடாதென்று நான் மேலும் கொஞ்சம் விரிவான திடலுக்கு அழைத்து வந்திருக்கிறேன். பெரியார் ராமசாமி ஆலமரத்தடியிலே இருந்து கொண்டால் போதுமென்று எண்ணிவிட்டார்.

இவ்விதமான அரசியல் நிலைமை இதி, 1967-ல் என்ன ஆகும், எப்படி இருக்கும் என்று அறிய நமது நண்பர்களுக்குக் கொஞ்சம் எண்ணம் பிறந்தது.

நான் 1917-லிருந்து 57-வரை நடைபெற்றதைச் சொன்னதற்குக் காரணம் எப்படி நம்முடைய தலைவர்கள் போட்டவித்து இடையிலே நன்றாக முளைவிட்டுச் செழுமையான செடியாகனாலும் இடைக்காலத்திலே அதை அழிப்பதற்கு எத்தனையோபேர் முயற்சி செய்தாலும், எப்படி அது நல்ல முறையிலே வளர்ந்திருக்கிறதோ அதைப்போலத்தான் 57-லே நமக்கிருக்கின்ற இந்த வளர்ச்சி 67-ல் நாமே கண்டு ஆச்சரியப் படத்தக்க அளவுக்கு மிக அதிகமான வளர்ச்சியாகப்போகின்றது. இதிலே யாருக்கும் ஐயம் தேவையில்லை. 1957-ல் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கருத்துக்களைக் கேட்டுவாழுகின்ற தமிழகத்திற்கும் கிடைத்திருக்கின்ற நிலைமைகள் காரணமாக இன்னும் ஒரு பத்தாண்டு காலத்தில் — இந்தப் பத்தாண்டு காலத்திலேதான்--மிக அதிகமான அளவுக்கு நல்ல பலன் — உருவாகக் கூடிய பலன் நம்முடைய சமுதாயத்திலே ஏற்பட இருக்கிறது.

இதை யூகித்துத்தானோ என்னமோ நிதியமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் கூட அண்ணாத்துரையை--திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரரை நான் கேட்டுக்கொள்ளுகின்றேன், நாட்டுப் பிரிவினையை விட்டுவிடுங்கள் விட்டுவிட முடியாவிட்டால் ஒரு பத்தாண்டுகாலத்திற்காவது அதை வலியுறுத்தாமல் இருங்கள் என்று சொன்னார்கள்.

நான் அதைச் சொல்லுகின்ற நேரத்திலே காங்கிரஸ்காரர்கள் சொல்லக்கூடும்; அதைத்தான் சுப்பிரமணியம் அவர்கள் மறுத்துவிட்டாரே, பத்திரிகையிலே வந்ததே என்று. எப்பொழுது மறுத்தார் என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும். ஏன் மறுத்தார் என்பதையும் கவனிக்கவேண்டும். தான் சொன்னதைத் தானே மறுக்கவேண்டிய அவசரத்திலே அவர் ஏன் பேசினார் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் நாங்கள் அவசரப்பட்டுப்பேசுகிறோம் என்றால் அதிலே அர்த்தம் இருக்கிறது. நாங்கள் அநுபவம் இல்லாதவர்கள். நிதியமைச்சர் சுப்பிரமணியத்திற்கு அநுபவம் இல்லை என்று சொல்ல முடியாது. அரசியல் நிர்ணய சபையிலும், மூன்றாலே இருந்த அமைச்சரவையிலும்-- இருந்திருக்கின்றார். ஆகவே நிரம்ப அநுபவம் பெற்றவர்தான். இவ்வளவு அநுபவம் இருக்கின்ற அவர்

அரண்மனை—ஆலமரத்தடி—விரிந்த திடல்

அவசரப்பட்டு அன்றைய தினம் பேசியிருக்கக் கூடாது என்பதை பின்னாலே உணர்ந்தார்.

அவர் சொன்னதும், கல்கத்தாவிலே இருக்கிற பத்திரிகைகளும், பம்பாய், டெல்லிபோன்ற வடநாட்டுப் பத்திரிகைகளும் தலையங்கம் எழுதி அவரைக் கண்டித்தன. எப்படி நீ பத்தாண்டு ஒப்பந்தம் கேட்கலாம்? அவர்களோ நாட்டைப் பிரிப்பவர்கள்; அவர்களோ பதினைந்துபேர், நீங்களோ 150-பேர் இருக்கிறீர்கள்—என்ன அவர்களுடைய ஒத்துழைப்புக்காக இந்தியாவின் ஆத்மாவைப் பறிகொடுக்கலாமா இதற்கா நீ மந்திரியாக இருக்கிறாய் — என்றெல்லாம் கண்டபடி எழுதிவிட்டன.

நானும் மெத்த வருத்தப்பட்டேன். ஐய்யோ பாவம் இப்போது தான் கொஞ்சம் உண்மை பேச ஆரம்பிக்கின்றார்—இன்னும் ஒரு ஐந்தாறுதடவையாவது பேசி அதற்குப் பிறகு இந்தப் பாவிகள் ஏதாவது சொல்லியிருந்தாலும் பரவாயில்லை. முதல்தடவையிலே சொல்லிவிட்டார்களே. இனி கொஞ்சம் விழிப்போடு இருப்பாரே என்று நான் கொஞ்சம் வருத்தப்பட்டேன்.

அதற்குப் பிறகு நிதியமைச்சர் சுப்பிரமணியம் தன்னுடைய நிலைமையைச் சரிப்படுத்திக் கொள்ள வேண்டியதாயிற்று.

ஒரு உறுப்பினர் எழுந்து கேட்டார், அதென்ன நாட்டுப் பிரிவினையைப் பத்தாண்டுக்குத் தள்ளிப் போடச் சொல்லுகின்றீர்களே—நாட்டுப் பிரிவினையை நீங்கள் ஒப்புக்கொள்ளுகின்றீர்களா? என்று.

உடனே நிதியமைச்சர் பதில் உரைப்பதற்கு முன்னால் சட்டமன்றத்தலைவர் இது அப்பொழுது நடைபெற்ற விஷயம்—இப்போது அதைப்பற்றி கேள்வி கேட்பானேன்—இப்போது வேண்டாம் என்றார்.

உடனே நிதியமைச்சர் தானே எழுந்து "இல்லை இல்லை—தலைவர்கள் அனுமதித்தால் நானே ஒரு விஷயத்தைச் சொல்லலாம் என்று இருக்கிறேன்; நான் நாட்டுப் பிரிவினையை ஏற்றுக்கொண்டவனல்ல — நேற்றும் ஏற்றுக் கொள்ளவில்லை, இன்றும் ஏற்றுக்கொள்ளவில்லை, என்றைக்கும் ஏற்றுக்கொள்ளமாட்டேன்—இந்தியா ஒன்று, அது பிரிக்க முடியாதது—நான் நாட்டுப் பிரிவினையைப் பத்தாண்டுக்கு ஒத்தி வைக்கச் சொல்லி கேட்கவே இல்லை—நான் பத்தாண்டு ஒத்தி வைக்கச் சொன்னது எதனையென்றால் **நாச வேலையை**—என்று அவர் சொல்லியிருக்கிறார்.

இது நியாயமா? நாச வேலையைச் செய்யாதீர்கள் என்று சொன்னால் அர்த்தம் இருக்கிறது — நாச வேலையைப் பத்தாண்டு செய்யாதீர்கள் என்றால் பதினோராவது ஆண்டில் அதற்கு உரிமை கொடுக்கின்றார் என்று பொருளா? நான் சாப்பிட்டுவிட்டு வருகின்றேன் அதற்குப் பிறகு கொட்டு என்று தேளுக்குச் சொல்லுவார்கள்.

தேள் கொட்டும் என்று தெரிந்தால் அது எப்போதும் கொட்டாமல் பாதுகாப்பு தேடவேண்டும்—நாசவேலை நாட்டிலே நடக்கும் என்று தெரிந்தால் நாசவேலை அடியோடு கூடாது என்று சொல்லவேண்டுமே தவிர பத்தாண்டுகளுக்கு நாசவேலை வேண்டாம் என்றால் என்ன பொருள்?

ஏன் அவர் அந்த அளவுக்கு பொருளற்ற முறையில் சொல்ல வேண்டி நேரிட்டதென்றால், ஏதவேது கூறாவிட்டால் வடக்கே இருக்கிறவர்கள் அவரைச் சந்தேகிக்கிறார்கள் வடக்கே இருப்பவர்கள் அவரைச் சந்தேகிக்கின்றார்கள் என்பதை முதல்தடவை நான் பேசுகின்ற கூட்டத்திலேயே நம்முடைய அமைச்சர் அவர்களிடத்திலே சொன்னேன். "ஐயா நீங்கள் ஆயிரம் தடவை தூற்றுங்கள். ஆனால், எங்களைக் காட்டியாவது வடநாட்டிலிருந்து நீங்கள் அதிகாரத்தைப் பெற அதைப் பயன்படுத்துங்கள்" என்று சொல்லி நான் அதற்கு Sappers and Miners என்ற உதாரணத்தைச் சொன்னேன். பட்டாளத்திலிருக்கின்ற பல பிரிவுகளில் அதுவும் ஒன்று — பின்னாலே பீரங்கிப் பட்டாளம் வருகின்ற நேரத்திலே பாதையைச் சரிப்படுத்துவது அவர்களது வேலை.

"எங்களை அந்தப் பட்டாளத்தைப்போலப் பயன்படுத்துங்கள் என்றுகூறினேன்.

அதற்கு நிதி மந்திரி சுப்ரமணியம் சொன்னார்:- "அண்ணாதுரை சொன்னார், உண்மைதான். அப்படிச் செய்யலாமா என்று கூடத் தான் ஆசை இருக்கிறது. ஆனால் இவரை எப்படி நம்புவது? எதிரியினுடைய பாதையைச் சரிப்படுத்திவிட்டுப் போய் இவர் ஏதாவது புதிதாகச் சுரங்கவெடி வைத்துவிட்டால் நான் என்ன செய்யமுடியும்? ஆகையினால் ஜாக்கிரதையாகத்தான் வருவேன்" என்று பாதுகாப்போடு சொல்லிவிட்டு இன்னொன்று சொன்னார். "இதை இவர் இப்போது வெளிப்படையாகச் சொல்லிவிட்டாரே. இதை வடநாட்டான் கேட்டுக்கொண்டுதானே இருப்பான். கேட்டுக்கொண்டிருந்தால் நானும் அண்ணாதுரையும் ஒன்று என்று அவன் சந்தேகப்படுவானே. இதற்கு நான் என்ன செய்வேன்?" என்ற கருத்துப்படப் பேசி சட்டசபையிலே அவர் பரிதாபப்பட்டார். அப்படிப்பட்ட சந்தேகம் அவர் பேரிலே ஏற்படக் கூடாதென்பதற்குத்தான் பத்து ஆண்டுகளுக்கு நான் ஒப்பந்தம் கேட்கவில்லை என்று அவர் சட்டசபையிலே பிறகு மறுத்துப் பேசினார்.

இந்தப் பத்து ஆண்டுகளில் என்ன நடக்கும் என்று நீங்கள் கேட்கிறீர்கள். தொடர்ந்து வரும். யாரார் பேரிலோ சந்தேகப்படுவார்கள். அவர்கள் யார் பேரிலே சந்தேகப்படுகிறார்கள் என்று இப்பொழுது சொல்ல முடியாது. திடீரென்று ஒருநாளைக்குக் காமராசர் பேரிலேகூட அவர்களுக்குச் சந்தேகம் வரலாம்.

அது நாங்கள் கையாளுகின்ற — முறையினாலே என்று நீங்கள் கருதவேண்டாம். காலம் காட்டுகின்ற குறி அப்படிச் செல்லுகின்றது.

ஏனென்றால் எதை ஒத்துக்கொண்டாலும் ஒத்துக்கொள்ளாவிட்டாலும் இன்றையதினம் காந்

அமைச்சர் கேட்ட ‘அந்தப் பத்தாண்டு!’

கிரசிலே இருக்கிற பெருந்தலைவர்களேகூட உள்ளூர உணருகின்றார்கள் தென்னாட்டுக்கு தேவையான அளவுக்கு முன்னேற்றம் இனி கிடைக்க வேண்டும் என்றால், மக்களை ஈடேற்ற வேண்டும் என்றால்,இப்பொழுது இருப்பதைவிட அதிகமான அதிகாரம் கிடைத்தால் ஒழிய அந்தக் காரியத்திலே வெற்றிபெற முடியாது என்பதைக் காங்கிரசிலே இருக்கிறவர்களே உணருகின்றார்கள்.

அவர்கள் நம்மைத் தூற்றுகின்றார்கள், நாம் உணர்ந்திருக்கின்றோம். நாம் நாட்டைப் பிரிக்கச் சொல்லுகின்றோம், நாச காலர்கள் என்றெல்லாம் ஏசுகின்றார்கள்—ஏசி முடிந்த பிறகு அவர்கள் தனியாக இருக்கின்ற நேரத்தில் அவர்களுக்கே மனதில் தோன்றுகின்ற எண்ணம், உண்மைதானே இவர்கள் சொல்வது-எதற்கெடுத்தாலும் வடநாட்டிற்குத்தானே போகவேண்டியிருக்கிறது. எல்லா அதிகாரமும் அங்கேதானே குவிக்கப்பட்டிருக்கிறது. நம்மிடத்திலே என்ன இருக்கிறது என்ற அந்தக் கழிவிரக்கம் அவர்கள் உள்ளத்திலே இருக்கிறது.

நாலு நாளைக்கு முன் எங்கள் தொகுதிக்கு வந்த முதலமைச்சர் காமராசரை அங்கே உள்ளவர்கள் காஞ்சிபுரத்திற்கு ஒரு நூல் ஆலை தேவை என்று கேட்டார்கள்—அதற்கென்ன வைக்கலாம் என்றார் சொல்லிவிட்டு உடனே, வைக்கலாம் ஆனால் ‘கதிர்’கிடைக்காது அது கொடுப்பதெல்லாம் டெல்லியிலே இருந்து உத்தரவு வர வேண்டும் என்று சொன்னார்.

இதெல்லாம் முடிந்ததும் நான் அந்தக் காஞ்சிபுரம் நண்பரைப் பார்த்துக் ‘காமராசர் என்ன சொன்னார் கேட்டீர்களா? அவர் நல்லவர் அவர்’ செய்ய வேண்டும் என்றுதான் ஆசைப்படுகின்றார். ஆனால் அதிகாரம் அவரிடத்திலே இல்லை, எல்லாம் டெல்லியிலே இருக்கிறது என்ற உடனே அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தவரானார். இநத கருத்து யாருக்குப் புரிகின்றதோ அவர்கள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம்.

இது நாளாக நாளாக வளருமே தவிர குறையாது.

ஏனென்றால் வடநாடு வளர்ந்திருப்பது—நன்றாகத் தெரிகிறது. தேய்ந்திருக்கிற தென்னாடு மறுபடியும் முன்னேற வேண்டும் என்றால் முன்னாலே வளர்ந்திருக்கிற வடநாடு அதற்கு ஏற்றபடி இடமளிக்காதுஎன்பதும் இப்பொழுது ஓரளவுக்கு நன்றாகத் தெரிந்து கொண்டு வருகின்றது.

எப்பொழுதுமே உங்களுக்கு ஒன்று நான் சொல்லுவேன், காளியாயி வரங்கொடுக்காது என்பது பக்தனைவிடப் பூசாரிக்குத்தான் நன்றாகத் தெரியும். பூசாரி ஏதோ உடுக்கை அடிக்கிறானே என்று நீங்கள் எண்ணுகிறீர்கள். அவன் வயிற்றுப் பிழைப்புக் கொடுமையாலே உடுக்கை அடிக்கிறானே தவிர அவனையே நீங்கள் தனியாகக் கேளுங்கள். காளியாயி வரப் பிரசாதமா என்று—உங்களுடைய மடியை முதலிலே பார்ப்பான். பார்த்த உடனே நீங்கள் தேங்காய் கற்பூரம் வைத்துக் கொண்டிருந்தால் ஆகா இது கண் கண்ட தெய்வமாயிற்றே கந்த சாமிக்குக் காளியாயிதான் கை கொடுத்தாள் — சாமிக்கண்ணுக்கும் காளிதான் கண் கொடுத்தாள்—என்று சொல்லுவான்.

மடியிலே ஒன்றுமில்லாமல் விசாரிக்க மட்டும் கேட்டால்— உடனே திருப்பி அவனே கேட்பான் என்னடா பைத்தியக்காரனாக இருக்கிறாய் காளி சக்தி வாய்ந்தவளானால் என்னை ஏன் இந்த நிலையிலே வைத்திருக்கிறது? எங்கள் தகப்பன் பூசாரி, நானும் பூசாரி, என் மகனும் பூசாரி—இதுதான் இந்தக் காளியினுடைய சக்தி. என்னையே கை தூக்கிவிடாத இந்தக் காளி உன்னை எங்கே கை தூக்கிவிடப் போகிறது என்று பூசாரி சொல்வான்.

அதைப்போல டெல்லியிலே இருக்கிறது தேவதை. அது வரங்கொடுக்குமா கொடுக்காதா என்பது நம்மைப் போன்றவர்களுக்குக் கூட தெரியாது. உடுக்கை அடிக்கிறார்கள் அல்லவா காங்கிரஸ் பூசாரிகள் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

மூன்று தடவை அடித்துப் பார்த்தார்கள்.

தேவிகுளம் பீர்மேடு பிரச்னை இருக்கிறதே அதைப்போல் தமிழர்களுக்கு நியாயமான அப்பழுக்கற்ற பிரச்னை வேறு ஒன்றுமே கிடையாது. தமிழர்கள்தான் அங்கே வாழுகின்றார்கள் என்று நம்முடைய சென்னை சர்க்காரும், புள்ளிவிவரங்களைக் காட்டியிருக்கிறது.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தேவிகுளம் பீர்மேடு தமிழர்களுக்குத்தான் சொந்தம் என்று தீர்மானம் போட்டிருக்கிறார்கள்; நாங்களே வாங்கிக்கொடுப்போம் என்று இதே மதுரையில் கூட காமராசர் பேசியிருக்கிறார். டெல்லி என்ன செய்தது?

கேரளத்தார் கேட்கிறார்கள் ஆகையினால் அங்குதான் இருக்கவேண்டும் என்றார்கள். என்ன செய்தார்கள் காமராஜர்கள்? இவர்கள் ஒன்றும் வடநாடு தென்னாடு என்று பேசவேண்டாம்; நாங்கள் ஒன்றும் வடநாட்டுக்கு அடிமையல்ல எங்களாலே நிமிர்ந்து நிற்கமுடியும்; நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே என்றுசொன்ன நக்கீரன் பரம்பரை என்றெல்லாம் மாலை நேரத்திலே பேசுகின்றார்கள் — மதிப்புக் குரிய காங்கிரஸ் தோழர்கள்; இவர்கள் தேவிகுளம் பீர்மேடு பிரச்னையிலே நம்முடைய அப்பழுக்கற்ற நியாயத்தை டெல்லி ஒத்துக்கொள்ளாத நேரத்தில் என்ன செய்தார்கள்? ஒரு கணம் புருவத்தை நெறித்துப் பார்த்தார்களா? தேவிகுளத்தைப் பெறாமல் திரும்பமாட்டேன் என்று சொன்ன அமைச்சர்யார்? தேவிகுளம் கிடைக்காவிட்டால் அமைச்சராக இருக்கமாட்டேன் என்று சொன்னவர் யார்?

நீதிக் கட்சியாரைப் பார்த்து அப்போது ஆயிரம் மேடையிலே கேட்டிருக்கின்றார்கள். பிசின் போட்டாஒட்டியிருக்கிறது? என்று இன்றையதினம் இவர்கள் பிசின் போடாமலே அல்லவா ஒட்டிக்

காங்கிரசைக் குடையாமலில்லை நம் குரல்

கொண்டிருக்கின்றார்கள்! நீதிக்கட்சிக்குப் பிசின் போட்டார்கள்: வெள்ளைக்காரன் போட்ட பிசினில் ஒட்டிக்கொண்டார்கள்—இப்போது பிசின்போடுவதற்கு ஆளே கிடையாது. பிசின்போடுவதற்கு ஆளே இல்லாத நேரத்தில் இவர்கள் ஒட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்றால், அதற்கு ஏதாவது நான் உதாரணம் சொல்ல வேண்டும் என்றால் அட்டையைப் போல் ஒட்டிக்கொண்டு இருக்கிறார்கள் என்றுதானே சொல்லுவேன்.

அந்தத் தள்ளிவிடுங்கள். அது நாட்டுப் பிரச்னை. இவர்களுடைய ஏட்டிலேயே கணக்கெழுதினார்கள் இரண்டாவது திட்டத்தில் 400-கோடி தேவை என்று. என்ன கொடுத்தார்கள் — கிடைத்தது என்ன? இவர்கள் எங்கே வடநாட்டு ஆதிக்கத்திலே இருந்து விடுபட்டார்கள்?

கைத்தறிக்கு — கரை போட்ட வேட்டியும் சேலையும் ஒதுக்குங்கள் என்று சாதாரணப் பேச்சல்ல — சட்டசபைத் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பினார்களே, என்ன ஆயிற்று? டெல்லி என்ன மதிப்பளித்தது?

ஆகையினாலேதான் வடநாடு தென்னாட்டிலே உள்ளவர்களை எப்படியெப்படி மட்டந்தட்டுகின்றது என்பதை அவர்கள் நன்றாகத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள் நம்மைவிட.

அதை இன்றைய தினம் வெளியே சொல்லாமல் இருப்பதற்குக் காரணம் நான் உங்களுக்குச் சொன்ன கதையை நினைவு படுத்திக் கொண்டால் தெரியும். காளி வரம் அளிப்பவள் அல்ல என்று பூசாரி சொல்லிவிட்டால் பிறகு உடுக்கை அடித்துப் பிழைக்கின்ற பிழைப்பு என்ன ஆகும்?

அதைப்போல காங்கிரஸ் அமைச்சரே பார்த்து எங்களுக்கு ஒரு அதிகாரமுமில்லை, எல்லாம் வடக்கேதான் இருக்கிறது என்று சொன்னால் பிறகு இவர்களை யார் மதிப்பார்கள்? ஆகையினால்தான் பூசாரிக்கு வேலை கிடைக்க வேண்டும் என்பதற்காக உடுக்கை ஒலி கேட்கிறதே தவிர காளியினுடைய வரம் ஒன்றும் கிடைக்கவில்லை.

அதுகிடைக்க வேண்டுமானால் இந்தப் பத்தாண்டிலே கிடைத்தால்தான் உண்டு. இந்தப் பத்தாண்டுகளிலே நாம் செய்கின்ற செயல் எந்த அளவுக்குப் பலிக்கின்றதோ அதைப்பொறுத்துத்தான் அடுத்த தலைமுறைக்குத் தன்மானமுள்ள வாழ்வு.

இந்தப் பத்தாண்டிலே நாம் செய்கின்ற முயற்சி தோற்றுவிட்டால் பிறகு நீங்கள் கல்லின் பேரிலே பொறித்து வைத்துக் கொள்வதைப்போல் தெளிவாக எழுதி வைத்துக்கொள்ளலாம். ஆப்பிரிக்க நாட்டிலே இருக்கிற நீக்ரோக்களும் அமெரிக்க நாட்டிலே இருக்கிற சிகப்பிந்தியர்களும் எந்தக் கதியை அடைந்தார்களோ, அதே கதிதான் இங்கே பிறந்து வாழ்ந்து வருகின்ற பழந்தமிழ் மகனுக்குக் கிடைக்குமே தவிர வேறு எந்த மாதிரியான முற்போக்கும் கிடைக்காது.

பால் பொங்கி வருகின்ற அந்தப் பக்குவமான நேரத்தில் தாய்மார்கள் குழந்தை அழுதாலும் எழுந்து போகமாட்டார்கள். பால் பொங்குவது தெரிந்தால் கருத்துள்ள தாய் அழுகின்ற குழந்தையைக் கூட பின்னாலேபார்த்துக்கொள்ளலாம் என்று பொங்குகின்ற பாலில் கொஞ்சம் தண்ணீர் தெளித்து பால் பானையைக் கீழே இறக்கி வைத்துவிட்டுத்தான் தொட்டிலிலே அழுது கொண்டிருக்கிற குழந்தைக்குத் தன்னுடைய பாலைத் தருவதற்குச் செல்லுவார்கள்.

இந்தப் பத்தாண்டு பால் பொங்குகின்ற காலம் — இந்தப் பத்தாண்டிலே தான் யார் யார் நமமுடைய கருத்துக்களைக் கேட்க மறுக்கின்றார்களோ அவர்களுடைய செவி வழி நமது கருத்துக்கள் நுழைந்து உள்ளத்திலே தங்கி அவர்களை எல்லாம் நம் பக்கத்திலே ஈர்த்துக்கொண்டு வருகின்ற பக்குவமான காலம்.

பதினைந்து பேர் தி. மு. கழகத்தைச் சேர்ந்தவர்கள் சட்டசபைக்குப் போனோம். போனவுடனே திராவிட நாடு பிரிவினை விஷயம் இதற்கு முன்னாலே பத்து வருஷத்திலே எவ்வளவு வளர்ந்ததோ அந்தப் பத்தாண்டு வளர்ச்சியை இந்த மூன்று திங்கள் நமக்குத் தந்திருக்கின்றது என்று நான் சொன்னால் நீங்கள் வியப்படைவீர்கள். ஆனால் அது மிகைப் படுத்திச் சொல்வதல்ல.

வெளி நாட்டுப் பத்திரிகை இப்பொழுதுதான் எழுதுகிறது. திராவிட நாட்டுப் பிரிவினை என்று கேட்டுக்கொண்டு திராவிட முன்னேற்றக் கழகம் என்று ஒரு கட்சி —பத்துப் பதினைந்து பேர் சட்ட

விரைவில் ஆரம்பமாகும்

தோழர் இராதாமணாளன் தீட்டிய

"பாண்டியன் திருமேனி"

உள்ளம் தொடும் தொடர் கதை!

மன்றத்திலே இருக்கிறார்களாம்—என்று எழுதுகிறது.

பருவம் அடைதல் என்பது மனிதர்களுக்கு மட்டுமல்ல, கட்சிகளுக்கும் உண்டு. அந்தப் பருவம் அடைகின்ற பக்குவம் இருக்கிறதே ஒரு கட்சி அரசியல் நடவடிக்கைகளுக்கு உள்ளே நுழைகின்றபோதுதான் அந்தப் பருவம அடைகின்றது என்று பொருள்.

அதே நேரத்தில் பருவம் அடைகின்ற நேரத்தில்தான் ஆபத்தும் வருகின்றது என்பதை நான் உணராமல் இல்லை. அது உடலுக்கும் சரி, அரசியலுக்கும் சரி—அதுதான் ஆபத்து அளிக்கக்கூடியது.

ஆனால் ஒன்றை நீங்கள் தெளிவாக நம்பலாம். ஆபத்துக்கள் வராமல் பாதுகாப்பதற்கும், வரக்கூடிய ஆபத்துக்களை தவிர்ப்பதற்கும் ஆபத்தை மூட்டலாம் என்று எண்ணிகொண்டு வருகின்றவர்கள் ஆபத்திலே சிக்கிக்கொண்டோமே என்று பின்னாலே அல்லற்படுகின்ற அளவுக்கும் எனக்கு. இயற்கையாக இருக்கிற அறிவோடுகூட பெரியார் இராமசாமி நல்ல பயிற்சி அளித்திருக்கின்றாரே. அதுவும் சேர்ந்து தங்கபடி பயன்படும். சுலபத்திலே நான் ஏமாறமாட்டேன்.

அவராலேயே என்னை சபலமடையச் செய்ய முடியவில்லை என்றால், தமிழ் நாட்டிலே வேறு யாரிடத்திலே நான ஏமாறுவேன்.

ஆகையினாலே நல்ல பக்குவப்பட்டிருக்கின்ற இந்த நேரத்தில் தி. மு. கழகம், பிறர் வசப்படும்படியோ பிறருக்கு அஞ்சும்படியோ நாங்கள் எந்தக் காலத்திலும் நடந்துகொள்ளமாட்டோம். அதே போலவே சட்டசபையிலும், நாங்கள் சென்றிருப்பது காங்கிரஸ் அமைச்சர்களை ஏசுவதற்கு அல்ல என்பதை நான் சட்டசபையிலும் சொன்னேன்; இங்கேயும் சொல்லுகின்றேன்.

அதைப்பற்றி இரண்டு மூன்று திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் சட்டசபைக்குப் போனால் அவர்களுக்கு மூன்று கடமைகள் இருக்கின்றன. ஒன்று, அவர்கள் எந்தத் தொகுதியிலே தேர்ந்தெடுக்கப்பட்டார்களோ அந்தத் தொகுதி மக்களுக்குச் செய்யவேண்டிய நன்மையைச் சாதிக்கவேண்டிய கடமை இருக்கிறது.

மற்றொன்று, அந்தச் சட்டசபையிலே விவாதத்துக்கு வருகின்ற எல்லாப் பிரச்சினைகளின் பேரிலும் இயக்கத்துக்கு மாறுபாடில்லாத கருத்துக்களை தந்து தீரவேண்டும் —மூனறுவது கடமை, அவர்கள் எந்த இயக்கத்தின் தூதுவர்களாக அங்கே சென்றிருக்கிறார்களோ, அந்த இயக்கத்தினுடைய அடிப்படைக் கொள்கை —மூலாதாரமான கோட்பாடு —சிறிதும் கெடாத வகையிலே பணியாற்ற வேண்டும். (அடுத்த வாரம்)

3-ம் பக்கத் தொடர்ச்சி

இன்னும் இருட்டிருக்கிறதே — அதைப்போக்க முனையவேண்டும் என்று வலியுறுத்தி வருகிறோம். அந்த இருள் அகற்றப்படாமல், கொண்டாடபபடும் விழாக்களால், உருவான பலன் எப்படிக் கிடைக்க இயலும்?

ஆகஸ்டு-15 நாடெங்கும் கோலாகலமாக நடக்கிறது—செங்கோட்டையில் கொடியேற்றுகிறார் நேரு —திருவனந்தபுரத்தில் மரியாதை ஏற்கிறார் பிரசாத் —காமராஜ் வானொலியில் பேசுகிறார் — பட்டம்மாள் பாடுகிறார்—பள்ளி மாணவர்கள் விடுமுறை பெறுகிறார்கள்—பத்திரிகைகள் தனி இதழ் வெளியிடுகின்றன — சினிமா இலவசமாகக் காட்டபபடுகிறது—நாடகம், இசை எல்லாம் கிடைக்கிறது.

இதே ஆகஸ்டு 15-ல், நாட்டில் என்ன நடக்கிறது? இதோ, ஏடு தருகிறது:

மிராசுதார்களுக்கும் விவசாயிகளுக்கும் திருச்சி மாவட்டம் முசிரியில், தகராறு. மிராசுதார்களின் பிடிவாதம் காரணமாக தகராறு முற்றி, கைகலப்பு நிகழ்ந்ததில் ஏழுபேருக்குக் காயம்.

ஜெய்பூரில், ஒரு டஜன்தடவைகள் கண்ணீர் வாயுப்பிரயோகம் நடத்தப்பட்டது. பள்ளிச் சம்பளம் உயர்த்தப்பட்டிருப்பதைக் கண்டித்து; மாணவர்களும் பொதுமக்களும் ஊர்வலம் நடத்தினர். பார்லிமெண்டு உறுப்பினர் அரிஷ்சந்திரா, இந்தக் கோரிக்கைக்காக உண்ணாவிரதம் இருந்து வருகிறார்.

ஆகஸ்டு 15-ந்தேதியன்று நடைபெற்ற நிகழ்ச்சிகள் இவை—ஏட்டாளர் மறைத்தது எவ்வளவோ—நாம் காணக் கிடைத்தது இதுதான். இப்படி ஒவ்வோரிடத்திலும், பாடுபடும் பாட்டாளிமுதல், சாதாரணப் பொதுமக்கள்வரை, அடிக்கடி ஆர்ப்பாட்டங்களும் கண்டன ஊர்வலங்களும் வேலை நிறுத்தங்களும் செய்ய வேண்டியவர்களாயிருக்கும்போது, எப்படி மகிழ்ச்சி ஒளி பூக்கும்? இந்திய உபகண்டத்திலே, இந்தப் பத்தாண்டுக் காலத்திலே, மனமகிழ்வோடு இருக்கின்ற பகுதி எதுவும் இல்லை. மராட்டியம், கூர்ஜரம், பஞ்சாப், வங்கம், அஸ்ஸாம், நாகர்குன்று, தமிழகம் இப்படி எங்கும் அதிருப்தியும் ஆத்திரமுமே அரசோச்சுகிறது. மக்களாவது, மனநிறைவோடு உள்ளார்களா எனின் பாடுபடும் விவசாயிகள் மட்டுமல்ல சர்க்காரிலே பணியாற்றுவோர்கூட அதிருப்தியோடும் 'ஐயோ! என்கிற பெருமூச்சோடுமே வாழுகின்ற நிலைமை நீடிக்கிறது. இப்படி வறுமையும் வாழ்க்கைச் சுமையும் கொட்டும் தேளாகவும் கடிக்கும் பாம்பாகவும் இருக்கும்போது, சுதந்திரத்தின் உண்மை ஒளியினை உணரும் சக்தி எங்கிருந்து ஏற்படும் ஏழைக் குடிமகனுக்கு? இந்தக் குறைபோக்கிவிட்டு, பிறகு சுதந்திரம் பற்றிச் சொன்னால், அமெரிக்கரைப்போல, வீடுகள் விழாக் கூடங்களாகும்! உள்ளங்கள் குதூகலமடையும் — அதைச் செய்யாமல், எவ்வளவுதான் ஆடம்பரமும் ஆர்ப்பாட்டமும் செய்தாலும் அவ்வளவும் காற்றோடு போகுமே ஒழிய, களிப்பளிக்காது — சுதந்திரத்தின் அருமையையும் உணர்த்தாது —அதற்காகப் பாடுபட்ட உத்தோமர்த்தர்களையும் நினைவாக்காது. கடவுளைக் காட்டி 'போடு தட்சணை' எனக் கேட்கும் பூசாரிகளைப்போல, மறைந்துபோன உத்தமர்களைக் காட்டி, 'பாராட்டுங்கள் எம்மை' என்று காங்கிரஸ் அரசு கேட்பதால், பயனில்லை. உண்மைச் சுதந்திரம் ஏற்பட வேண்டும் — ஒவ்வொருவரின் வாழ்வும் சிறக்கவேண்டும். அதுவே, திருநாளாகும்! பிறவெல்லாம் வெறும் ஆர்ப்பாட்ட நாட்களாகவே ஆகும்!!

★

'மாஸ்கோவில்' தமிழ் மணக்க!

"பாருங்கள் ஐயா! பெயரை மாற்றிவைத்துக் கொள்வதிலே, ஆர்வம் காட்டுகிருர்கள். அதை ஒரு பெரிய காரியமாகக் கருதுகிருர்கள். என்ன இருக்கிறது பெயரில்? டால்மியாபுரம் என்று இருந்தால் என்ன! அதைக் **கல்லக்குடி** என்று அழைக்கவேண்டுமாம்—அதற்காக ஒரு கிளர்ச்சியே நடத்திஞர்கள். இப்போது, **தமிழ் நாடு** என்று பெயரை மாற்றி வைக்கவேண்டும் என்கிருர்கள். இதை ஒரு பெரிய காரியமாகக் கருதிப் பேசுகிருர்கள். பெயரை மாற்றுவதா ஒரு கட்சியின் இலட்சியமாக யிருக்க வேண்டும்? ஊர்—நாடு—இவைகளின் பெயர்களை மட்டுமல்ல, சொந்தப் பெயர்களைக்கூட மாற்றி, நெடுஞ்செழியன், மதியழகன், அறிவழகன் என்று வைத்துக் கொள்ளுகிருர்கள். என்னதான் இருக்கிறதோ, இப்படிப் பெயர் மாற்றிக் கொள்ளுவதில்?", என்று கேலியும் கிண்டலும் வீசும் பெரியவர்களிருக்கிருர்களே! அவர்களுக்காக இதோ ஒரு சேதி வருகிறது—**ஐங்குன்ருர், கண்ணன், பெருமாள்** என்று பெயர்களை மாற்றிவைத்துக்கொள்ளுகிருர்களாம்!! "தமிழ்—ஆகா! எவ்வளவு அருமையான மொழி—அதன் இலக்கியங்கள் சுவைச் சுரங்கமாகவன்ருே உள்ளன—அந்தச் சுந்தர மொழியின் மீது எமக்குள்ள ஆர்வத்தையும் மரியாதையையும் காட்டும் அறிகுறியாக எமது பெயர்களைக்கூட மாற்றிவைத்துக் கொள்ளுகிருேம்," என்று தெரிவித்து இவ்வண்ணம் செய்திருக்கிருர்கள். யார் தெரியுமா? இந்தியைப் போலவே தமிழும் சிறந்தது என்று 'லாலி' பாடுகிருர்களே அந்த வடநாட்டுக்காரர்கள் அல்ல, **ரஷ்யர்கள்!!** ஆமாம், இங்கிருந்து வெகுதூரத்திலிருக்கும் ரஷ்யர்கள்தான் இவ்வண்ணம் செய்திருக்கிருர்கள். பழைய பெயர்களை விட்டுவிட்டு பெருமாள் கண்ணன், ஐங்குன்ருர் என்று பெயர் மாற்றிக்கொண்டிருக்கிருர்கள். இவ்விதம் அவர்கள் செய்யக் காரணம், தமிழின் மீதுள்ள ஆர்வமும் மரியாதையும்! தமிழின் பெருமையை ரஷ்யர்கள் அறிய சரியானதொரு சாதனம் எதுவும் கிடையாது. மாஸ்கோ பல்கலைக் கழகத்தில் இந்திக்கு இடமுண்டு! ஆனல் தமிழுக்குக் கிடையாது! டில்லி அரசு, இந்தியைப் போற்றுவதால், இப்படி முடிசூட்டப்பட்டிருக்கிறது, இந்திக்கு. இருந்தும் ரஷ்யர்களிலே பலருக்கு, மூத்தமொழி — இலக்கிய வளம் செறிந்த மொழி என்று கூறுகிருர்களே அந்தத் தமிழைக் கற்க வேண்டும் என்கிற ஆவல் எழும்பியுள்ளது. தமிழ் கற்கிருர்கள்! கற்றதும் ரசித்துவிட்டு, 'ஆகா! அற்புதம்!' என்று போய்விடவில்லை — எப்படி, இங்கிருப்போர் லெனினது பெயரையும் ஸ்டாலின் நாமத்தையும் சாக்ரடீஸ் திருப்பெயரையும் அவர்கள் பாலுள்ள ஆழ்ந்தபற்றுக் காரணமாகத் தத்தம் சிருர்களுக்குச் சூட்டி மகிழ்கிருர்களோ, அது போல தமிழ்ப் பெயர்களை ரஷ்யர்கள் சூட்டிக்கொள்ளுகின்றனர்.

"லெனின் கிராடில், **தானே** படித்து தமிழ்ப் பணிபுரிபவர் ரூதின். தமிழை அழகாகப் பேசுகின்ருர். மொழியிலக்கணம் பயின்றுள்ளார். தமிழைச் சிறக்க மதிக்கிருர். 1929-ம் ஆண்டிலேயே ரஷ்யாவில், தமிழிலக்கணம் உணர்ந்தவர்கள் பலர் இருந்தனர் என்று தெரிகிறது! ரூதின், "மிகத் தலைமையான மொழி" என்று பல காரணங்கள் காட்டி விளக்கி எழுதியுள்ளார்." என்று எழுதுகிருர் தோழர் இராம. மீனுட்சி **சுந்தரம்!** இவ்வளவு ஆர்வமும், மரியாதையும் தமிழ்மீதுள்ளதாம் ரஷ்யருக்கு. கண்ணூரக் கண்டு, மனம் பூரித்து, எழுதுகிருர் கடிதம்!!

அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் பயின்று, கரந்தைப் புலவர் கல்லூரி மேலைச் சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரி இரண்டிலும் முதல் வராகத் திகழ்ந்து, மதுரை அமெரிக்கன் கல்லூரியில் விரிவுரை யாளராகப் பணியாற்றி, தற்போது சென்னை அரசினர் கலைக்கல்லூரி தமிழ்ப் பேராசிரியராக இருப்பவர் 'பி. ஆர். எம்.' என்று செல்லமாக அழைக்கப்படும் இராம. மீனுட்சி சுந்தரம். செந்தமிழ் வல்லார்! அதோடு, தந்தமிழ் வாழ வேண்டுமென்பதில் தணியாத ஆர்வமும் ஆசையும்கொண்டவர்! அதனல், ரஷ்யர்களுக்குத் தமிழ் மீதிருக்கும் பற்றினைக் கண்டதும், பறக்கும் புருவாகிருர், களிப்புக் கடலில் மூழ்கி தமிழ்நாட்டுக்குக் கடிதம் எழுதுகிருர். இவரை, ருஷ்ய அரசாங்கம் மூன்ருண்டுக் காலம் தமிழ்ப் பணியாற்றுவதற்காக அங்கு அழைத்துச் சென்றிருக்கிறது. தமிழின் புகழொளி பரப்ப, டில்லி இவரை அனுப்பவில்லை! ரஷ்யா, அழைத்துச் சென்றிருக்கிறது!! மூதாதையர் காலமெனின், புலவர்களையும் புரவலர்களையும், தமிழின் பெருமையோத நாற்றிசைக்கும் நமது மன்ஞதி மன்னர்கள் வலுவிலே அனுப்புவர்—ஒளிபரப்புவர். இது போது, மாற்று நாட்டவரே வலுவில் அழைப்பு அனுப்பி, நமது புலவரை இட்டுச்சென்று, எழிலிலக்கியம் கற்கின்றனர் — இதுவன்ருே மொழி என்பாராட்டுகின்றனர் — தத்தமது பெயரைக் கூட தமிழின் மீதுள்ள ஆசையால் மாற்றிக்கொண்டுள்ளனர்—ஐங்குன்ருர் எனும் பெயர் ரஷ்யாவில்! கேட்கும்போது, எவ்வளவு இன்பமும் பெருமையும் சுரக்கிறது நமக்கு!!

இவ்விதம் போராவலும், ஆசையும் கொண்டுகிடக்கிருர்களே ரஷ்யர்கள். அவர்கள், தமிழின் மணமெல்லாம் உணரவும், புகழையெல்லாம் அறியவும், இலக்கியங்களையெல்லாம் கற்கவும், வசதியேதேனும் உண்டோ? இல்லை, என்கிருர் மீனுட்சி! எழுதுகிருர், தமிழ் நாட்டுக்கு, கடிதம்!!

"ஐயா,

இங்குப் பலர் ஆர்வத்துடன் தமிழ் பயில்கின்றனர். ஆனல்,

சுவடியின்றி ஒரே பழஞ்சுவடியை ஒளிபபடம் (Photo) எடுத்துப் படிக்கின்றனர். தமிழ்ச் சங்கம் நிறுவப் பெறுகின்றது. ஓர் தமிழன் இங்கு வந்து செய்யும் முதல் முயற்சி தமிழ் இங்கு வேரூன்ற வேண்டும்.

தமிழரும் தமிழன்பரும் சுவடிகள் சில, பழையனவேனும் பதிவுச் சுவடி அஞ்சலில் அடியிற் காணும் முகவரிக்கு விரைவில் அனுப்பியுதவ வேண்டுகிறேன். விலை கொடுத்து வாங்க சட்டம் இடம் தரவில்லை. அன்புகூர்ந்து தமிழ்ப் பணிக்கு முந்துக! விரைவில் தமிழ் வானொலி மாஸ்கோவிலிருந்து பரவும்.

வணக்கம்

இராம. மீனுட்சிசுந்தரம்.

இது கடிதம்! களிப்பும் அதோடு கையேந்தும் காட்சியும் கிடைக்கிறது நமக்கு!! போதிய நூல்கள் இல்லையாம்—சட்டம் இடமளிக்கவில்லையாம் — 'பழையனவேனும்' என்று கெஞ்சும் குரலில் கேட்கிருர்—பதிவுத் தபாலில் அனுப்பியுதவுங்கள் என்று வேண்டுகோள் விடுக்கிருர்.

தமிழுக்கென ஒரு அரசு இருந்திருப்பின், புலவர் அங்கிருந்து இவ்வண்ணம் அவலக் குரல் எழுப்பும் நிலை ஏற்பட்டிருக்காது. இருப்பதுதான், இந்தி அரசு ஆயிற்றே! இது எங்ஙனம், வலுவில், வசதியளிக்கும்!! ஆகவே, அன்பரின் வேண்டுகோளுக்குச் செவி சாய்க்கும்படி தமிழன்பர்களைக் கேட்டுக்கொள்ளுகிருேம்.

ரஷ்யாவில் தமிழ் மணக்கிறது! ஒரு தமிழனின் முதல் முயறசி! விரைவில் சங்கமும் அமையுமாம்!! —ஆகவே, வசதியுள்ள ஒவ்வொருவரும், புலவரின் குரலுக்கு, தக்க முறையில் பதிலளிக்குமாறு கோருகிருேம்.

பாராள்வோரின் பாக்கியம்தான் கிடையாது தமிழுக்கு! எனவே, பற்றுக்கொண்ட மைந்தர்களால் தான் தமிழொளி பரவவேண்டும் —ஒரு நல்வாய்ப்பு இது.' அனுப்புங்கள், நூல்களை.

முகவரியை 'தமிழ் நாடு' இதழ் தந்துள்ளது. அது இது.

U. S. S. R.
Moscow
Zubovsky Boule vard, 21.
Pandit P. R. M. Pillai M.A.

★

"இவர்கள்" செயல்!!

வினேபா அடிகள், கால் நடையாகவே நடந்து, கனவான்களே! பூதானம் கொடுங்கள், அது வற்றவர் பணதானம் அருளுங்கள், அதுக்கும் வழியில்லாதவர் சிரம தானம் தாருங்கள் என்று சிற்றூருக்கும் பேரூருக்கும் சென்று, கெஞ்சிக் கேட்டு வாங்குகிருர்! அதன்மூலம், ஏழைகளுக்கும் இல்லாதவர்களுக்கும் நியாயம் தேடித்தர இயலும், இரத்தம் சிந்தாமலே சம உடைமைச் சமூகத்தை நிறுவமுடியும் என்று நம்பிச் செய்கிருர்!! அவருடைய எண்ணம் நிறைவேறுமோ, இயலாதோ, அது வேறு விஷயம். எனினும் இடுப் பொடிந்த ஏழை மக்கள்பால், அவர் காட்டும் அன்பும் பரிவும், உள்ளத்தைச் கிலிர்க்கச் செய்யும் —ஒரு உத்தமமான எண்ணத்தோடு அவர் இத்திருப்பணியைச் செய்கிருர் என்பதால் அவர்பால் எல்லோருக்கும் அன்பு சுரக்கிறது. அவர்கேட்கும் பூதானம் தரலாம் — வசதியுள்ளவர். பணதானமும் அளிக்கலாம்; வக்கீலாகயிருந்தும் பிறகு மந்திரியாகவும் கவர்னராகவுமிருந்தும் கொள்ளைச் சம்பளம் வாங்கியவர் அவர். விநோபா கேட்கும் சிரமதானமும் அளிக்கலாம். ஏனெனில், வாழ வேண்டிய வாலிப வயதினர் அல்ல! வாழ்ந்து அலுத்தவர்!! "விநோபா, நீங்கள் தென்னுட்டைப்பார்த்துக் கொள்ளுங்கள். நான் வடக்கில் ஒருபகுதியைப் பார்த்துக் கொளளுகிறேன்" என்று கூறிவிட்டு பணிபுரியலாம். காங்கிரசில், விநோபாவைபபோல, அவருக்கும் செல்வாக்குண்டு. அப்படிப்பட்ட நல்ல குணமும் பணியாற்றும் ஆர்வமும, இதுவரையில் ஏற்படவில்லை! ஆனல், தபால் சிப்பந்திகள் தவிக்கும் நிலையைக் காட்டி வேலை நிறுததம் செய்யப்போகிருேம் என்றதும், உடனே அறிக்கைவிடுத்தாராம்— அன்பர் நேருபண்டிதருக்கு எழுதினராம்—"நான் எந்த வேலையையும் செய்யத்தயாராயிருக்கிறேன" என்று!!

தபால் பொறுக்க வேண்டுமா, தபால்;கொண்டு கொடுக்கவேண்டுமா, ஏதாயினும் இதோ நான் ரெடி—என்று அவசர அவசரமாக 'இரகசியமாக' அல்ல, ஒரு அறிக்கை மூலம், தன்னுடைய தேசபபற்றை நிலைநாட்டிக்கொண்டிருக்கிருர், கே. எம். முன்ஷி!!

ஏழைகளின் துயரக்குரல்கேட்டு, அவர்தம் குரலுக்கு நீதிதர டில்லி மறுப்பது அறிந்து, "அப்படியா? நேரு, எனக்கு வேண்டியவர்! எப்படியாவது உங்களுக்கு நீதி கிடைக்கும்படிச் செய்கிறேன்" என்று முன்வரவில்லை, முன்ஷி. ஆனல், அறிக்கை விடுக்கிருர்! அதன் மூலம், தன் தேசப்பற்றை நிரூபித்து நேருவின் கண்களைத் தம் பக்கம் திருப்ப நினைக்கிருர்!! தான் மட்டுமின்றி, தன்னுடைய ஆதீனத்திலிருக்கும் பாரதீய வித்யாபவன் சிப்பந்திகளுள்பட அனைவருடனும் வந்து பணியாற்றுகிறேன், என்று அறிவித்திருக்கிருர். "அவசர நெருக்கடியென்றல் எதற்கும் தயார் என்று கூறும் முன்ஷி! ஆகா எவ்வளவு தேசபபற்றுடையவர் தெரியுமா?" என்று நாடு பேசும், நல்ல விளம்பரம் கிடைக்கும் எனும் எண்ணம் போலும்!! அவர் அறிக்கைவிடுத்ததும், முன்னுள் பீகார் கவர்னரான தியாகர், இன்னும் ஒருபடி மேலேபோய், "நான் சாதாரணத் தொண்டனுக்கூட வேலை செய்யத் தயார்" என்று அறிக்கை விடுத்திருக்கிருர். அதைக் கண்டதும் பஞ்சாப முதலமைச்சரின் மனைவி, "நானும் தயார்! டெலிபோன் ஆபரேட்டராகயிருக்கிறேன்" என்ருராம். இந்த அறிக்கைகளைக் கண்டதும், தென்னுட்டிலிருந்து சென்றிருக்கும் காங்கிரஸ் பார்லிமெண்டு உறுப்பினர்களிருக்கிருர்களே டாக்டர் சுப்பராயன், இராசகோபாலன், ஆறுமுகம், நஞ்சப்பா, எஸ். வி. ராமசாமி, ஆர். இராமநாதன் செட்டியார், கோவிந்தராஜுலுநாயுடு முதலியோரும் அறிக்கைவிடுத்து, "நாங்களும் எந்த வேலைக்கும் தயார்" என்று தெரிவித்துக்கொண்டனராம், நேருபண்டிதருக்கு. 'ரிடையர்டு' ஆன சென்னை போலீஸ் ஐ. ஜி. கரீம் என்பார், தான் ஒரு 'வாச்மேனுகக்கூட' பணிபுரிந்து, நெருக்கடியைத் தீர்க்கத்தயார், என்று

அறிவித்துக் கொண்டாராம்!!

இந்தப் பெரியவர்களுக்கு உள்ளபடியே, நெருக்கடியைத் தீர்க்கும் ஆவலிருந்திருக்குமாயின், அஞ்சல் சிப்பந்திகளுக்கும் அரசினருக்கும் 'பாலமாக'யிருந்து, சமரசம் ஏற்பட வழி செய்யலாமல்லவா? அதை விட்டுவிட்டு, அவசர அவசரமாக, 'அதற்குத் தயார்! இதற்குத் தயார்' என்று அறிக்கைகள் விடுவானேன்! அரசாங்கம், தன சிப்பந்திகளைமிரட்டுவதில் அர்த்தமிருக்கிறது — ஆனால், மக்களுடைய நன்மைகளுக்காக வாழ்வதாகக் காட்டிக்கொள்ளும் இவர்களுக்கும் ஏன் இந்த ஆவல் வர வேண்டும்? ஒரு முன்ஷியும், திவாகரும், சுப்பராயனும், இராமனாதஞ் செட்டியாரும் எத்தனை நாளைக்குத்தான் பணியாற்றிவிட முடியும்? இன்றைய தினம் இப்படி அறிக்கை விடுத்தார்களே, இந்த தேசபக்தர்கள், தமது தொண்டாற்றும் பண்பைக் காட்டிக்கொள்ள இதுவரை எவ்வளவோ சந்தர்ப்பங்கள் ஏற்பட்டதுண்டே! தென்னாட்டில் புயல் வீசி, மக்கள் கலங்கிக் கண்ணீர் வடித்தபோது ஓடி நின்று தம்மாலான திருத்தொண்டினைச் செய்திருக்கலாமே! தறியாளர்கள் தவிப்பைக் கண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தார் தலையில் துணி மூட்டைகளைச் சுமந்து விற்றபோது, இந்தத் தேசபக்தர்களும், செய்திருக்கலாமே அவ்விதம்! அப்போதெல்லாம், ஏற்படவில்லை, ஆர்வமும் ஆசையும். இப்போது, சர்க்காருக்கு, ஆபத்பாந்தவர்களாக இருக்கிறோம் என்று அறிக்கை விடுக்கிறார்கள்! அதோ, விநோபா பண தானம் கேட்கிறார்—முன்ஷி கொடுக்கலாம் திவாகரும் தரலாம், செட்டிநாட்டு ராஜாவின் திருத்தம்பி ராமநாதனும் தரலாம், குமாரமங்கலம் ஜமீன்தாரர் சுப்பராயனும் கொடுக்கலாம் — பூதானம் பணதானம் மட்டுமல்ல, சிரம தானமும் தரலாம்! விநோபா, தி. மு. க. அல்ல. அவர்களிருக்கும் காங்கிரஸ் கூடாரத்தால் பாராட்டப்படுபவர்! நேருவுக்குக்கூட, ஆனந்தமாயிருக்கும் இவர்கள் விநோபாவுக்குத் துணை சென்றால். அந்த மனித நீதி கோரும் செயலுக்கு உதவ, ஒத்துழைப்பு நல்க, இந்த தேசோத்தமர்களுக்குச் சித்தம் வரவில்லை. ஆனால், ஏழை அதிகச் சம்பளம் கேட்டு, கிடைக்காததால் வேலை நிறுத்தம் செய்ய வேண்டிய கட்டாயத்துக்கு ஆளானான் என்றதும், தீனபந்துவாகிறார்கள் சர்க்காருக்கு! நேருவின் திருப்பார்வை, இப்போதாவது விழாதா ஏதாவது ஒன்று கிடைக்காதா எனும் சபலம்போலும்!

வாழ்ந்து அலுத்தவர்கள், வாழ்வில் சகலவித சுகத்தையும் அனுபவித்தவர்கள் எவ்விதக் கவலையும் தீண்டமுடியாத அளவுக்கு பண வசதி படைத்தவர்கள் —இவர்கள். ஏன், துயர் துடைக்கும் தொண்டுக்கு முன்வரக் கூடாது? அதை விட்டுவிட்டு, ஏதோ இவர்கள் ஆபத்து வந்த சமயத்தில் தயாராயிருக்கும் 'சைன்யம்' போலவும், ஆபத்துக் காலத்தில் கைகொடுக்க அஞ்சாதவர்கள்போன்றும், அறிக்கை விடுக்கிறார்கள். இந்த அறிவிப்புகளையும் அதை விடுத்தவர்களையும் கண்டபோது, உண்மையில் ஒரு பக்கம் நமக்குப் பரிதாபமும் இன்னொரு பக்கம் நகைப்புமே உருவாயிற்று, நமக்கு. பரிதாபத்துக்குக்காரணம், மக்களுடையகுரலைக்கூடச் சாதாரணமாகக் கருதும் அளவுக்கு, நேருவின் பார்வையில் படும் ஆசை இவர்களுக்கு இருக்கிறதே என்பது! நகைப்புக்குக் காரணம்'' இப்படி அறிக்கைகள விடுத்தே தேசோத்தமர்களாக முயலுகிறார்களே'' என்பது! நல்லவேளையாக, அஞ்சல் சிப்பந்திகளின் வேலை நிறுத்தம், நின்றுவிட்டது. அப்படியின்றி, நடைப்பெற்றிருக்குமானால், இந்த ஆபத்பாந்தவர்களின் 'தேசபக்தி' விளங்கியிருக்கும் — ஒரு வேளை, அந்த 'ஆபத்து' வராது என்பதால்தான் இவ்வித அறிக்கை விடுத்தார்களோ!! ★

'முத்தமிழுக்கு'ப் பாராட்டு!

இயலிசை நாடகத் துறைகளில் முப்பெரும் வல்லுநர்களான டாக்டர் மு. வரதராசனார், திருமதி கே. பி. சுந்தராம்பாள், நாடகப் பேராசிரியர் ப. சம்பந்தனார் ஆகியோரைப் பாராட்டி சென்னை அரசினர் பரிசுகள் வழங்கும் சீரிய நிகழ்ச்சி, இந்த ஆண்டுச் சுதந்திர நாளன்று நடத்தப்பட்டிருக்கிறது. மூவரின் கருத்துக்களைக் குறித்தும், அவர்தம் அரசியல் நோக்கம் பற்றியும் பலதரப்பட நினைப்போரிருப்பினும், இப்படியொரு பாராட்டு விழா, முதன் முதலாக நடத்தப்பட்டிருப்பது மிக மிக மகிழ்ச்சிக்குரியதாகும். கதைகளும், இலக்கிய வளம் நிரம்பிய கட்டுரைகளும் வழங்கி, தமிழுக்குப் பெருமை தேடுகிறவர் டாக்டர் வரதராசன். இன்னிசை மூலம், தமிழின் சுவையை அன்றுதொட்டு இன்று வரை பரப்பிவரும் தமிழ்ச் செல்வியாவார்கள் சுந்தராம்பாள் அவர்கள். நாடகப் பேராசிரியர் அவர்கள் நற்றமிழுக்குச் செய்திருக்கும் தொண்டு, சாதாரணமானதல்ல. எனவே, இந்த முத்தமிழ்ப் புரவலர்களையும் அரசினர், இப்போதாவது பாராட்ட முன்வந்தது, காலந் தாழ்ந்த செயல் எனினும், களிப்பும் பெருமையும் அளிப்பதாகும். தமிழுக்கு மதிப்பளிக்கும் எண்ணம் அரசினருக்கு ஏற்பட்டமைக்காக அவர்களைப் பாராட்டுகிறோம். இதுபோன்ற, திருச்செயல்கள், இனியும் அரசினரால் நடத்தப்பட வேண்டுமெனவும் விழைகிறோம். வாழ்க தமிழ்! வாழ்க முத்தமிழ் வித்தகர்கள்!!

★